தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

# முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 10 பிப்ரவரி 2015 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**கரிகாலன்**
**கட்டி வைத்த**
**கல்லணை...**

**குழந்தைகளின்**
**ஆரோக்கியமான**
**வளர்ச்சிக்கு...**

**மீன்**
**வளர்ப்பீர்!**
**கூடுதலாக**
**வருமானம்**
**பெறுவீர்!!**

## பெண்மையைப் போற்றிடுவோம்...!

# அனைத்து வங்கி சேவைகளும் ஒரே இடத்தில்...
# பாரதீய மகிளா வங்கி லிமிடெட்.

## உங்கள் சேமிப்பிற்கு அதிக வருவாய்.

**BMB SAVINGS**
சேமிப்புக் கணக்கு

**5%* p.a** — ₹1 லட்சத்துக்கும் அதிகமான தொகைக்கு

**4.5% p.a** — ₹1 லட்சம் வரை

*வங்கிக் கணக்கில் உள்ள மொத்த தொகைக்கும் 5%

BMB SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB SILVER SAVINGS
சேமிப்புக் கணக்கு

BMB GOLD SAVINGS
சேமிப்புக் கணக்கு

## BMB Komal Kali

### உங்களின் மகளுக்கு சுதந்திரத்தின் சிறகுகளை அளித்திடுங்கள்

**பெண் குழந்தைகளுக்கு சுய அதிகாரம் வழங்கும் ஒரு புதுமையான ரெக்கரிங் டெபாஸிட்**

• வயது : ஒரு நாள் குழந்தை முதல் 15 வயது வரை • குறைந்தபட்ச மாதாந்திர முதலீடு ரூ. 50 அல்லது அதற்கும் அதிக தொகை, மிகச் சரியாக ரூ. 50-ன் பெருக்குத் தொகை • மாதத் தவணையை மாதத்தின் எந்த தேதியில் வேண்டுமானாலும் செலுத்தும் வசதி • காலம் : 3 ஆண்டுகள் முதல் பத்தாண்டுகள் வரை • கடன் வசதி உண்டு : மொத்த மதிப்பின் 85% (தனி நபர் விபத்து காப்பீடு) • TDS இல்லை

இணையதளம்: www.bmb.co.in
https://bmbsmartbanking.co.in/netbanking

பிஎம்பி
பாரதீய மகிளா வங்கி
மகளிருக்கு சுய அதிகாரம், பாரதத்தின் சுய அதிகாரம்.
முற்றிலும் இந்திய அரசுக்குச்சொந்தமானது

BMB
BHARATIYA MAHILA BANK
Empowering Women, Empowering India.
Wholly owned by Govt. of India

स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर

**சென்னை கிளை :** ஓவர்சீஸ் டவர்ஸ், 756-L, அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி : 044 28523321

**கோயமுத்தூர் கிளை :** தேவராஜன் சென்டர், ஐயப்ப பூஜா சங்கம் அருகில், 206/1, சத்யமூர்த்தி ரோடு, ராம்நகர், கோயமுத்தூர் - 641 009 தொலைபேசி : 0422-4373749/29

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

# முற்றம்

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

## வெற்றிக் கொடி கட்டு...

அன்புள்ள மாணவ செல்வங்களே,

இது மார்ச் மாதம், தேர்வு பயம் உங்களை இறுக்கி பிடிக்கும் நேரம். தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர் கொள்ள, வெற்றிகரமாக வெளியே வர என்ன செய்யலாம் என்று பார்க்கலாமா?

முதலில் உங்கள் மீது நம்பிக்கை வையுங்கள். இந்த ஒரு தேர்வு, உங்களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போவதில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இந்தத் தேர்வினை தாண்டியும் வாழ்க்கை விரிந்து பரந்து காத்திருக்கிறது.

தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார விளக்கைக் கண்டுபிடித்தது அவரின் ஆயிரமாவது முயற்சியில்தான். அப்போது ஒரு நிருபர் அவரிடம் கேலியாகக் கேட்டார். ‘உங்களின் முயற்சி 999 தடவை தோற்று விட்டது தானே?’ என்று கேட்டார். அதற்கு எடிசன் சொன்ன பதில் இது, ‘இல்லை...எந்த உலோகங்களைப் பயன்படுத்தினால், மின்சார விளக்கு எரியாது என்று 999 முறை கற்றுக் கொண்டேன். அதுவும் நான் கற்றுக் கொண்ட பாடமே தவிர, அது வீண் இல்லை’.

தோல்வியே வெற்றிக்கான படிக்கட்டுகள் என்பதை உணருங்கள். இன்றைய தோல்வி நாளைய வெற்றிப் பயணத்தின் முதல் அடியாக இருக்கட்டும்.

படி ஒன்று

எனக்கு கணிதம் ஆங்கிலம் எளிதில் வருவதில்லை. என்னால் அதிகாலையில் எழுந்து கொள்ள முடியவில்லை. படிப்பதை நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை... இன்னும் உங்களுக்கு இருக்கும் எல்லா தயக்கங்களையும் பட்டியல் இடுங்கள்.

படி இரண்டு

உங்களுக்குத் துணையாக இருக்கும் சக்திகளை வரிசைப்படுத்துங்கள். உங்கள் பெற்றோர் உங்களை முன்னுக்கு கொண்டு வர தங்களின் உடல் பொருள் ஆவி என்று அனைத்தையும் தர தயாராக இருக்கிறார்கள். உங்களின் படம் வரையும் திறமை அபாரமானது. தமிழில் எதுகை மோனையுடன் கவிதை எழுதும் திறமை இருக்கிறது.

படி மூன்று

இப்போது உங்களின் சவால்களையும், திறமைகளையும் ஒன்றுடன் ஒன்று பொருத்துங்கள். சவால்களை எப்படி எதிர் கொள்வது என்று ஒரு திட்டம் தயாரியுங்கள். வேலை இப்போது சுலபமாகத் தோன்றும். கணிதமும் சரி, கவிதையும் சரி, கைப்பழக்கம் மட்டுமே. மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் வராதது என்று எதுவும் இல்லை. உங்களால் முடியும் என்று முதலில் நம்புங்கள். நீங்கள் இந்த உலகில் வெற்றிக் கொடி நாட்டப் பிறந்தவர்கள் என்பதை உறுதியுடன் மனதில் பதிய வையுங்கள்.

போரில் தோல்வியுற்று மனமுடைந்த மன்னன் ராபர்ட் புரூஸ். அவன் ஒரு சத்திரத்தில் அமர்ந்து இருந்த போது சிலந்தி ஒன்று தன் வீட்டைக் கட்ட பலமுறை முயன்று கொண்டிருந்தது. தன் வாயில் இருந்து சுரக்கும் ஒருவித திரவத்தால் தன் வலையைக் கட்ட முயன்ற போது அது பலமுறை தோற்றது. ஆனாலும் அது தன் முயற்சியை நிறுத்தவில்லை. முடிவில் தன் இலக்கை அடைந்தது.

ஒரு சிலந்திக்கு இருக்கும் தன்னம்பிக்கையும், விடா முயற்சியும், மனிதனாகப் பிறந்த நமக்கு இருக்க வேண்டாமா?

நம்பிக்கையுடன் போராடினால், விடாமுயற்சி செய்தால், மனதை ஒருமுகப்படுத்தி, இலக்கினை நோக்கி நகர்ந்தால்,

*வெற்றி நிச்சயம்  உங்களைத் தேடி வரும். வாழ்க்கை வாழ்வதற்கே... வாழ்த்துக்கள்...*

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 16 இதழ் 10 பிப்ரவரி 2015

விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்

வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

எஸ். சின்னப்பன்

செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்

டபிள்யூ. சிராஜுன்னிசா

பொது மேலாளர்

ஆசிரியர் குழு

டி. ஆர். வேதநாயகம்

கூடுதல் இயக்குநர்

எம். மாதவி

கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்

எல். ராஜா

கூடுதல் திட்ட இயக்குநர்

ஆர். ராஜசேகர்

கூடுதல் திட்ட இயக்குநர்

மோ. கணேஷ்குமார்

தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்

ப. கலைமதி

மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்

ஏ. கண்ணன்

கணக்கர்

சு. சசிகலா

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)

மு. செல்வம்

பிழை திருத்துபவர்

எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்'

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்னை தெரசா மகளிர் வளாகம்,

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை

நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413

தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

# இந்த நிலை மாறுமா?

அன்புள்ள வாசகர்களுக்கு,

அனைத்து மகளிருக்கும் அகில உலக பெண்கள் தின வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்வதில் முற்றம் அளவற்ற மகிழ்ச்சியை அடைகிறது. மகளிர் தினம் ஒவ்வொரு ஆண்டும் வருவதும், அதனை ஒரு கொண்டாட்டமாக நடத்துவதும் வழக்கமாகி வருகிறது. ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் உரிமையோடும், சார்புத் தன்மையின்றியும், கல்வி கற்று, பல பதவிகளை வகித்து வருவது போன்ற மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு வருவதை மறுக்க முடியாது. இருப்பினும், ஆண், பெண் இருவரிடமும் மனமாற்றம் நிகழ வேண்டும் என்பதை உணர்த்துவதற்குதான் மகளிர் தினம் போன்ற நாட்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

பெண்களை மட்டுமே பேய்களாக சித்தரித்துக் காட்டுகின்ற நிலை,

பெண்களுக்கு மட்டுமே சூட்டப்படும் 'மோகினி', 'மலடி' போன்ற பட்டங்கள் மாறாத நிலை,

'கற்பு' என்ற ஒன்றை, பெண்களுக்கு மட்டுமே சொந்தமாக்கி அவர்களை பாகுபடுத்தும் நிலை,

அச்சம், மடம், நாணம் போன்ற குணாதிசயங்கள் பெண்களுக்கு மட்டுமே தேவை என அறிவுறுத்தும் நிலை,

பெண்களை தாழ்த்தியும், ஆண்களை உயர்த்தியும் கூறப்பட்டு வரும் பழமொழிகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் நிலை

அச்சமும், தியாகமும் பெண்களுக்கு என்றும், 'வீரம்' ஆண்களுக்கு என்றும் உள்ள மனநிலை மாறாத நிலை,

அழகிப் போட்டிகளும், வளர் இளம் பெண்களுக்கு அலங்காரமும், சடங்குகளும் செய்து மகிழும் நிலை,

சுத்தம் செய்தல், சமையல் செய்தல், முதியோரைக் கவனித்தல் போன்ற கடினமான பணிகளைப் பெண்களுக்கு மட்டும் ஒதுக்கி வைத்திருக்கும் நிலை

இது போன்ற நிலைமைகளை என்று முழுமையாக மாற்ற முடியுமோ அன்றே பெண்களுக்கு விடுதலை. பெண்களுக்கு இழைக்கப்படும் பல அநீதிகள் சமூகமயமாக்கப்பட்டு, அநீதிகளை அவர்களாலேயே உள்வாங்கச் செய்து விட்ட நிலைமையானது மாற்றப்பட வேண்டும்.

பெண்கள் மத்தியில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த மாற்றங்கள் கல்வி மற்றும் பொருளாதார ரீதியில் நிகழ்ந்தால் மட்டும் போதாது. பெண்களும், ஆண்களும் அனைத்திலும் நிகரானவர்கள் என்ற மனநிலை மாற்றமே இந்த மகளிர் தின விழாவின் குறிக்கோளாக அமைய வேண்டும் என்று கூறிக் கொண்டு, மீண்டும் மகளிர் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

# உள்ளே...

உலக தண்ணீர் தினம்


| | |
|---|---|
| கரிகாலன் கட்டி வைத்த கல்லணை | 4 |
| வேண்டாம் குழந்தைத் திருமணம் | 8 |
| முதலுதவி செய்வது எப்படி? | 12 |
| பூக்கள் – நாடகம் | 20 |
| சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 22 |
| மகளிருக்கு தற்காப்பு கலை பயிற்சி | 30 |
| பண்ணைக் கழிவுகளில் இருந்து மின்சாரம் | 32 |


கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

ஜனவரி மாத முற்றம் இதழில் இடம்பெற்றிருந்த அனைத்து மாவட்ட மகளிர் திட்டம் மற்றும் ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகங்களின் முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி, அனைத்து மகளில் சுய உதவிக் குழுக்களின் சார்பில் எங்களின் நன்றி.

மணிமேகலை நாலாயிரம்
அமுதம் மகளிர் சுய உதவிக் குழு,
இருக்கன்துறை, திருநெல்வேலி மாவட்டம்.

கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளியவர்கள் வளம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்வேறு நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வரும் புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், வெற்றிக் கதைகளும் முற்றத்தில் வெளியிடப்படுவது மிகவும் நன்றாக இருக்கிறது.

விஜயலட்சுமி கார்த்திக்,
அன்னை இந்திரா மகளிர் குழு,
திருத்தவெளி, காஞ்சிபுரம் மாவட்டம்.

கடந்த மாத முற்றம் இதழில் மேலாண்மை இயக்குநர் அவர்களின் ‘குழந்தைகள் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு’ குறித்த கட்டுரை காலத்திற்கு ஏற்ற பயனுள்ள ஒன்றாகும். கால்நடைகள் பராமரிப்பு, வட்டி மானியம், குழந்தை திருமணம் தடுப்பு ஆகியவை குறித்த கட்டுரைகளும் சிறப்பாக உள்ளன.

ச. இளங்குமரன், வட்டார திட்ட மேலாளர்,
வட்டார திட்ட செயலாக்க அலகு,
தருமபுரி மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கும், அவர்களின் வளமான எதிர்காலத்திற்கும் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து முற்றம் இதழில் இடம்பெறும் கட்டுரைகள் சிறப்பாக இருக்கின்றன.

ராஜலட்சுமி சங்கரன்,
வெள்ளி நிலா மகளிர் குழு,
பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம்.

## இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

கல்லும் களி மண்ணும் மட்டுமே சேர்ந்த ஒரு அமைப்பு, 1900 ஆண்டுகளுக்கும் மேலாக காவிரி வெள்ளத் தைத் தடுத்து நிறுத்தி வருவது அதிசயமே ஆகும்.

## கரிகாலன்

# கட்டி வைத்த கல்லணை...

**நம் தமிழ்நாட்டில் உள்ள உலக பழமை வாய்ந்த அணையான கல்லணை திருச்சிக்கு மிக அருகில் காவிரி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ளது. திருச்சியில் அகண்ட காவிரி எனப்படும் காவிரி ஆறு, முக்கொம்பு என்ற இடத்தில் அமைந்துள்ள மேலணையில் காவிரி, கொள்ளிடம் என இரண்டாகப் பிரிகிறது. அதில் காவிரி ஆற்றின் கிளை கல்லணையை வந்தடைகிறது. கல்லணையில் காவிரி ஆறு, வெண்ணாறு, புது ஆறு, கொள்ளிடம் என 4 ஆறுகளாக பிரிகிறது.**

பாசன காலங்களில் காவிரி, வெண்ணாறு, புது ஆறு ஆகியவற்றிலும், வெள்ள காலங்களில் கொள்ளிடத்திலும் தண்ணீர் கல்லணையில் இருந்து திறந்து விடப்படும். அதாவது வெள்ள காலங்களில் கல்லணைக்கு வரும் வெள்ள நீர் காவிரிக்கு இடது புறம் ஓடும் கொள்ளிடம் ஆற்றில் (முக்கொம்பில் காவிரி ஆற்றில் இருந்து பிரிந்த கிளை ஆறு) திருப்பி விடப் படும். எனவே காவிரி டெல்டா மாவட்டத்தின் பல இலட்சம் ஏக்கர் நிலங்கள் மழைவெள்ளத் தில் இருந்து காப்பாற்றப்படுகிறது.

### கல்லணையின் வரலாறு

இந்த அணை கரிகாலன் என்ற சோழ மன்ன ரால் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. தற்போதுள்ள அணைகளில் கல்லணையே மிகவும் பழமையானது எனவும், தற்போது பயன்பாட்டில் உள்ளது எனவும் அறியப்படு கிறது. இதுவே உலகின் மிகப் பழமையான நீர்ப் பாசனத் திட்டம் என்றும் கூறப்படுகிறது. மணலில் அடித்தளம் அமைத்து கல்லணை யினை கட்டிய பழந்தமிழர் தொழில் நுட்பம் இன்று வரை வியத்தகு சாதனையாகப் புகழப்படுகிறது.

கல்லணையின் நீளம் 1080 அடி, அகலம் 66 அடி, உயரம் 18 அடி. இது நெளிந்து வளைந்த அமைப்புடன் காணப்படுகிறது. கல்லும் களி மண்ணும் மட்டுமே சேர்ந்த ஒரு அமைப்பு, 1900 ஆண்டுகளுக்கும் மேலாக காவிரி வெள்ளத்தைத் தடுத்துநிறுத்தி வருவது அதிசயம் ஆகும். 1839ஆம் ஆண்டு அணையின் மீது பாலம் ஒன்று கட்டப்பட்டது. பல இடங் களில் இருந்தும் ஏராளமானோர் இவ்வணையைக் காண வருவதால், தற் போது இது ஒரு சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது.

### அணை கட்டப்பட்ட தொழில் நுட்பம்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழகத்தை ஆண்ட கரிகால சோழன் காவிரியில் அடிக்கடி பெருவெள்ளம் வந்து மக்கள் துயரப்படுவதைக் கண்டு அதைத் தடுக்க காவிரியில் ஒரு பெரிய அணையைக் கட்ட முடி வெடுத்தான். ஆனால் அது சாதாரண காரியம் அல்லவே. ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் கனஅடி நீர் பாயும் காவிரியில் தண்ணீரின் மேல் அணை யைக் கட்டுவதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள் தமிழர்கள்.

நாம் கடல் தண்ணீரில் நிற்கும்போது அலை நம் கால்களை அணைத்துச் செல்லும். அப்போது பாதங்களில் கீழே குறுகுறுவென மணல் அரிப்பு ஏற்பட்டு நம் கால்கள் இன்னும் மண்ணுக்குள்ளே புதையும். இதைத்தான் சூத்திரமாக மாற்றினார்கள் அவர்கள். காவிரி ஆற்றின் மீது பெரிய பெரிய

## கல்லணையின்

### சிறப்பை பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை பாடல்களும், தெலுங்குச் சோழக் கல்வெட்டுகளும், திருவாலங்காட்டுச் செப்பேடுகளும் தெரிவிக்கின்றன.

பாறைகளை கொண்டு வந்து போடுவார்கள். அந்தப் பாறைகள் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் போனதும் அதன் மேல் வேறொரு பாறையை வைப்பார்கள். நடுவே தண்ணீரில் கரையாத ஒரு வித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசி விடுவார்கள். இப்போது இரண்டு பாறைகளும் ஒட்டின் கொள்ளும். இப்படிப் பாறைகளின் மேல் பாறைகளைப் போட்டு, படு வேகத்தில் செல்லும் காவிரி நீர் மீது கட்டியதுதான் கல்லணை.

### சர் ஆர்தர் காட்டன் பங்களிப்பு

கல்லணை மணல் மேடாகி நீரோட்டம் தடைப்பட்டது. காவிரி டெல்டா தொடர்ச்சியாக வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் 1829ல் காவிரி பாசனப்பகுதி தனி பொறுப்பாளராக ஆங்கிலேய அரசால் நியமிக்கப்பட்ட சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர் கல்லணையை ஆராய்ந்தார்.

இவர்தான் பயனற்று இருந்த கல்லணையை சிறு சிறு பகுதியாய் பிரித்து மணல் போக்கிகளை அமைத்தார். அப்போது கல்லணையின் அடித்தளத்தை ஆராய்ந்தவர், பழந்தமிழரின் அணை கட்டும் திறனையும், பாசன மேலாண்மையும் உலகுக்கு எடுத்துக் கூறியதுடன் கல்லணைக்கு 'கிராண்ட் அணைகட்' என்ற சிறப்புப் பெயரையும் சூட்டினார்.

### கரிகால சோழன் மணிமண்டபம்

பழமையான இந்த அணையைக் கட்டிய கரிகால சோழனை சிறப்பிக்கும் வகையில் காவிரி ஆற்றின் இடது கரை ஓரத்தில் கரிகால சோழ மன்னனுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் யானை மீது கரிகால சோழன்அமர்ந்த நிலையில் வெண்கலச் சிலை அமைக்கப்பட்டு உள்ளது. ■

# சிறந்த கன்றுகளைப் பெற...

அன்பார்ந்த முற்றம் வாசகப் பெருமக்களே!

கருவுற்ற பசுக்களிலிருந்து சிறந்த கன்றுகளை பெறுவதற்கான வழிமுறைகளைக் காண்போம்.

சினைக்காலத்தின் தொடக்கத்திலும், இறுதியிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். காரணம் சினை காலத்தின் தொடக்கத்தில் பசுவினை பராமரிப்பதில் தவறுகள் ஏற்பட்டால் கருச்சிதைவு (அபார்ஷன்) ஏற்பட வாய்ப்புண்டு. சினைக் காலத்தின் இறுதி மாதங்களில் கரு வளர்ச்சி வேகமாக நடைபெறும். பசுவின் பால் மடியிலும் பால் சுரப்பதற்கு ஏற்ப மாற்றங்கள் ஏற்படும். இவைகளை ஈடுகட்ட கீழ்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

சினை பசுவினை மேய்ச்சலுக்கோ அல்லது வேறு காரணங்களுக்கோ அதிக தூரம் நடக்கவிடக் கூடாது. மற்ற மாடுகளுடன் சேர்ந்து சண்டையிடுவது போன்ற சம்பவங்கள் நடவாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் கருச்சிதைவு ஏற்பட்ட பிற கால்நடைகளோடு சேர்ந்து இருப்பதை தவிர்க்க வேண்டும். முதல் இரண்டு மாத சினைக்காலத்தில் குடற்புழு நீக்க மருந்து கொடுக்கக் கூடாது. சினைப் பசுவினை காலையில் மட்டும் 4 (அ) 5 மணி நேரம் மேய்ச்சலுக்கு விடுவது பசுவிற்கு எளிய உடற்பயிற்சியாக அமையும். இதனால் கன்று ஈனுவதில் பசுவிற்கு சிரமம் இருக்காது.

சினை காலத்தின் ஏழாவது மாதத்தில் கன்றின் வளர்ச்சி வேகமாக இருக்கும். இதனை ஈடுகட்ட தாய்பசுவின் உணவு தேவையும் அதிகரிக்கும். எனவே தாய்ப்பசுவிற்கு நாளொன்றுக்கு 1.5 கிலோ அடர் தீவனமும், 10 – 15 கிலோ வரை பசுந்தீவனம், 3 – 4 கிலோ வரை உலர் தீவனம் (வைக்கோல்) தர வேண்டும். இதனால் கருவில் இருக்கும் கன்று ஆரோக்கியமாக வளரும்.

கன்று ஈனுவதற்கு ஒன்று (அ) இரண்டு நாட்களுக்கு முன்பே தாய்ப்பசு சரிவர தீவனம் எடுக்காமலும், அசை போடாமலும், வாலை அடிக்கடி சுழற்றிக் கொண்டும் இருக்கும். முதல் கன்று ஈனும் பசுவாக இருந்தால் காலால் வயிற்றுப் பகுதியை உதைத்துக் கொள்ளும். தாய்ப்பசுவின் இடுப்புப் பகுதி இளகிய நிலையில் தளர்ந்து இருக்கும். கருப்பையின் வாய் வழியாக எண்ணை போன்ற திரவம் வழிந்து கொண்டிருக்கும். மடியின் காம்புகள் தடித்தும் சில நேரங்களில் பால் கசிந்துக் கொண்டும் இருக்கும்.

கன்று ஈனுவதற்கு ஒன்று (அ) இரண்டு மணி நேரங்களுக்கு முன்னாள் தாய்ப்பசுவின் கருப்பையின் தசைகள் அடிக்கடி சுருங்கி விரிவடையும். படுப்பதும், எழுந்திருப்பதுமாக இருக்கும். அந்த சமயத்தில் கீழே படுத்துக் கொண்டு கால்களை விரைப்பாக நீட்டிக் கொண்டும், மூச்சுத் திணறலோடு காணப்படும். இளகிய மனம் கொண்ட பெண்கள் இதனைக் கண்டு கலங்கக் கூடும். அந்த சமயத்தில் அஞ்ச வேண்டாம் சுகப்பிரவசம் நல்லபடியாகவே நடக்கும். ■

அடுத்த இதழில் பார்ப்போம்...

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
சென்னை.

# பெண்மையைப் போற்றிடுவோம்...!

ஆண்களைச் சார்ந்த குடும்ப பழக்க வழக்கங்கள் காரணமாக பெண்களுக்கு உரிய பங்கு அளிக்க மறுக்கப்பட்டது.

**சங்ககாலம் தொட்டு மகளிரை தாய்த்தெய்வங்களாக முதன்மைப்படுத்தி வணங்கி வந்தனர். இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட நாகரீக மாற்றங்களினால் பெண் இனத்திற்கு அளித்து வந்த முன்னுரிமைகள் மறுக்கப்பட்டு, சமூக மற்றும் பொருளாதாரப் பங்களிப்புகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். இது நம் நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய அளவில் பல்வேறு நாடுகளில் காணப்படும் ஒரு நிகழ்வாகும்.**

இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி காரணமாக மக்கள் தொகை பெருகியதுடன் அடிப் படையான மாற்றம் விழைவோரின் வளர்ச்சியும் ஏற்பட்டது. அப்போது தான் பெண்கள் பல்வேறு ஆலைகளிலும் தமது குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக பணி புரிய வந்தனர். ஆனால் ஆண் ஆதிக்கம், பெண் சமத்துவமின்னை மற்றும் வேலை செய்யும் இடத்தில் மோசமான செயல்பாடுகள் இவையாவும் பெண்களை அறைகூவலிடவும், தொடர்ந்து நேரிடையாகப் போராடவும் வைத்தன. மேலும் பொருளாதார மேம்பாடு கண்ட பெண்கள் தன்னிறைவுடனும், உரிமைகளை அறிந்து கொண்டவர் களாகவும் போராடத் துவங்கினர். ஏனென்றால் ஆண் களைச் சார்ந்த குடும்ப வழக்கங்கள் காரணமாக அவர்களுக்கு உரிய பங்கு அளிக்க மறுக்கப்பட்டது.

இத்தருணத்தில் குறைக்கப்பட்ட பணி நேரம், நல்ல சம்பளம் மற்றும் தேர்தலில் பங்கு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, 1908ஆம் ஆண்டு, நியூயார்க் நகர வீதிகளில் 15,000 மகளிர் திரண்டு போராட்டம் மேற்கொண்டனர். அப்போதுதான் உலக அளவில் மகளிர் தினத்தைக் கொண்டாடும் ஒரு யோசனை முதன்முறையாக முன் வைக்கப்பட்டது. அமெரிக்காவில் சமுதாயக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க அந்நாட்டில், 1909ஆம் ஆண்டு பிப்ரவரி 28 அன்று, அமெரிக்க நாட்டில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

டென்மார்க்கில் உள்ள கோபன்ஹேகன் நகரத்தில் 1910ஆம் ஆண்டு நடைபெற்ற சமூகப் பெண்களின் இரண்டாவது பன்னாட்டுக் கூட்டத்தில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த பெண்மணியான சமூகத் தலைவி கிளார ஜெட்கின் என்பவர், உலகத்தில் உள்ள அனைத்து பெண்டிரும் உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இந்த கோரிக்கையை ஏகமனதுடன் 17 நாடுகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பெண் உறுப்பினர்கள் ஏற்றுக் கொண்டனர்.

1910ல் கோபன்ஹேகன் நகரில் எடுத்த முடிவின்படி, உலக மகளிர் தினம் முதன்முறையாக 1911ஆம் ஆண்டு மார்ச் 19 அன்று ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் கொண்டாடப்பட்டது பன்னாட்டு மகளிர் தினத்திற்காக மார்ச் 19ம் தேதியை தேர்ந்தெடுக்க காரணம் என்னவெனில் 1848 மார்ச் 19 அன்று பிரஷ்ய நாட்டு மன்னர், மகளிரின் எழுச்சி மிக்க போராட்டத்திக் காரணமாக பெண்களுக்கு வாக்களிப்பதற்கான உரிமை உட்பட பல்வேறு சீர்திருத்தங்களை செயல்படுத்த ஒப்புக் கொண்டிருந்தார்.

அவ்வாண்டு உலகின் பல நாடுகளில் நடைபெற்ற பன்னாட்டு மகளிர் தினப் பேரணியில் சுமார் 1 மில்லியன் பெண்கள் மற்றும் ஆண்கள் கலந்து கொண்டு, பணி புரிவதற்கான உரிமைகள், தேர்தல் வாக்களிப்பு, தொழிற்பயிற்சி பெறுதல், மக்களுக்கான அலவலகங்களை நிர்வாகம் செய்தல் போன்றவற்றில் பெண்களுக்கான உரிமைகளை வலியுறுத்தியும், பெண்களுக்கு எதிரான வேறுபாட்டினை அகற்றுதல் போன்ற காரணங்களுக்காகவும் போராட்டம் நடத்தினர். ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவில் இது மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது.

நியூயார்க் நகரில் உள்ள ஆடை தயாரிக்கும் ஆலையில் 1911 மார்ச் 25ஆம் நாள் பெண் பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்த

சமயத்தில் மிகப் பெரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டது. பணியாளர்கள் வேலை நேரம் முடிவதற்கு முன்பே வீட்டிற்கு போகாமல் இருக்க ஆலையின் கதவுகள் மூடி தாளிடப்பட்டு இருந்ததால், தப்பித்து போக இயலாமல் தீயில் கருகி 140 பெண்கள் உயிரிழந்தனர். சரியான பாதுகாப்பு வசதிகளின்மையே இந்த விபத்துக்கு காரணமாகக் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சியின் விளைவாக மகளிர் தங்களின் உரிமைகளைப் பெற்றிட போராட வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டனர்.

மேலை நாடுகளில் பன்னாட்டு மகளிர் தினம் 1910ஆம் ஆண்டிலிருந்து 1920ஆம் ஆண்டு வரை நினைவு நாளாகக் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் நாளடைவில் அது குறைந்து விட்டது. மக்களின் எழுச்சிக்குப் பிறகு 1960ஆம் ஆண்டு முதல் மீண்டும் மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வந்தது.

1917ஆம் ஆண்டு சோவியத் நகரங்களில் நடந்த பன்னாட்டு மகளிர் தின செயல் விளக்கப் போராட்டங்கள் இரஷ்ய நாட்டில் நடந்த புரட்சிக்கு முதற்கட்டமாக அமைந்தது. அக்டோபர் புரட்சி நடந்த பிறகு அலெக்சாண்ட்ரா கொலோண்டை என்ற பெண் பொல்ஷெவிக் கழகத்தின் தலைவரான லெனினை சந்தித்து சோவியத் நாட்டில் மார்ச் 8ஆம் நாளை விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டுமென வலியுறுத்தினார். இரஷ்யாவின் அதிபர் லெனினும் அதற்கு ஒப்புதல் அளித்தார்.

1975ஆம் ஆண்டை உலக மகளிர் ஆண்டாக ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவித்து பன்னாட்டு மகளிர் தினத்திற்கு அனுமதியும், ஆதரவும் அளித்தது. 1977ல் பெண்களின் உரிமைகளைக் காப்பதற்கும், உலக அளவில் அமைதி ஏற்படுவதற்காகவும், ஒரு நாளினை ஒதுக்கி வைத்து கொண்டாட வேண்டும் என்ற முக்கிய முடிவொன்றை ஐக்கிய நாடுகள் சபை தனது உறுப்பு நாடுகளுக்கு பரிந்துரை செய்தது.

**ஆணுக்கு நிகராகத் தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு பெண்ணும் தமக்குள் ஒளிந்திருக்கும் தனித்திறமைகளை வெளிக் கொணர்ந்து, வியத்தகு சாதனைகள் பல புரிந்திட சர்வதேச மகளிர் தினத்தன்று பெண்கள் உறுதியினை ஏற்க வேண்டும்.**

இன்று ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாளன்று உலக மகளிர் தினம் உலகின் பல நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. நவீன உலகில் இந்த நாள் பெண்களின் சாதனைகளுக்குப் பாராட்டு தெரிவிக்கும் விதமாக (அவர்களின் நாடு, சம்பிரதாயம், மரபு, பொருளாதார மற்றும் அரசியல் நிலைமையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளாமல்) கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகின் பல நாடுகளிலும் இத்தினம் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆண்கள் தங்களது வாழ்க்கையில் சார்ந்த பெண்களுக்கு – தாயார், மனைவி, தோழி, மகள் போன்றவர்களுக்கு பரிசுகள் அளித்து கொண்டாடுவார்கள். சில நாடுகளில் அன்னையர் தினத்திற்கு சமமாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு, குழந்தைகள் தங்களது தாய், பாட்டி போன்றவர்களுக்கு சிறு பரிசுகளும் அளிப்பர்.

சோவியத் யூனியன் நாடுகளின் பிரிவினைக்குப் பிறகு அர்மேனியா நாட்டில் பன்னாட்டு மகளிர் தினம் கைவிடப்பட்டு அழகு மற்றும் தாய்மை தினம் என்ற பெயரில் ஏப்ரல் 7ல் புதிய விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. இந்த விடுமுறை நாள் அர்மேனியாவில் இயேசுபிரான் பிறக்கும் தருணத்தை அறிவிக்கும் முக்கிய விடுமுறை நாளுடன் ஒத்துப் போவதால் பிரபலம் அடைந்து விட்டது.

இருந்தாலும் மக்கள் மார்ச் 8 அன்று பன்னாட்டு மகளிர் தினத்தையும் கொண்டாடினார்கள். இதைப்பற்றி மக்கள் பேச்சுவார்த்தை நடத்தியபொழுது, மார்ச் 8 முதல் ஏப்ரல் 7 வரை உள்ள நாட்களை பெண்கள் மாதம் என்று அறிவித்தார்கள்.

சில நாடுகளில் இத்தினத்தன்று தொழில் நிறுவனங்கள் தங்களது நிறுவனத்தில் பணிபுரியும் மகளிர் தொழிலாளர்களுக்கு பரிசுகளை வழங்குகின்றனர். சில நாடுகளில் பள்ளிக் குழந்தைகள் தங்களது ஆசிரியைகளுக்கு பரிசுகள் வழங்குவர். பொது விருந்துகள் மற்றும் கொண்டாட்டங்களும் இத்தினத்தன்று சில நாடுகளில் நடைபெறுவதுண்டு.

நம் நாட்டில் பன்னாட்டு மகளிர் தினம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மகளிர் தினத்தன்று பல்வேறு கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. நவீன உலகில் மகளிர் சக்தியையும், சமூகத்தில் அவர்களது முக்கிய பங்கையும் மகளிர் தினத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த நூற்றாண்டில் பல்வேறு நாடுகளிலும் உயர்ந்த தலைமைப் பதவிகளில் பெண்கள் சாதித்து வருவதை நாம் காண்கிறோம். தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு பெண்ணும் தனக்குள் ஒளிந்திருக்கும் தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து, சாதனைகள் பல புரிந்திட சர்வதேச மகளிர் தினத்தன்று பெண்கள் உறுதியினை ஏற்க வேண்டும். ■

மருத்துவ ரீதியாக ஆணுக்கு 25 வயதிலும், பெண்ணுக்கு 21 வயதிலும் திருமணம் செய்து வைத்தல் நல்லது.

## வேண்டாம்

# குழந்தைத் திருமணம்...

பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளில் முதன்மையானது குழந்தைத் திருமணம் ஆகும். விளையாட்டு மனம் மாறாத சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு திருமணம் செய்வித்து, நாளடைவில் அவர்களை நடைபிணமாக்கும் செயலாக இது உள்ளது. மேலும் சமூகத்தில் நிலவும் பல்வேறு அநீதிகளுக்கும் காரணமாக உள்ளது. எனவே இந்தக் கொடியச் செயலுக்கு ஆதரவு அளிக்காமல், குழந்தைத் திருமணங்களைத் தடுக்க நாமும் கை கொடுப்போம். பெண் குழந்தைகளை வாழ விடுவோம்.



**உங்கள் பகுதியில் நடைபெறும் குழந்தைத் திருமணம் குறித்து கீழ்கண்ட அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்கலாம்**

| வ. எண். | மாவட்டம் | மாவட்ட ஆட்சித் தலைவர் | மாவட்ட சமூக நல அலுவலர் |
|---|---|---|---|
| 1 | சென்னை | 044 - 25228025 | 044 - 25264568 |
| 2 | கோயம்புத்தூர் | 0422 - 2301320 | 0422 - 2305126 |
| 3 | கடலூர் | 04142 - 230999 | 04142 - 221235 |
| 4 | தருமபுரி | 04342 - 230500 | 04342 - 233088 |
| 5 | திண்டுக்கல் | 0451 - 2461199 | 0451 - 2460092 |
| 6 | ஈரோடு | 0424 - 2266700 | 0424 - 2261405 |
| 7 | காஞ்சிபுரம் | 044 - 2723733 | 044 - 27239334 |
| 8 | கன்னியாகுமரி | 04652 - 279555 | 04652 - 278404 |
| 9 | கரூர் | 04324 - 257555 | 04324 - 257959 |
| 10 | கிருஷ்ணகிரி | 04343 - 239300 | 04343 - 235717 |
| 11 | மதுரை | 0452 - 2531110 | 0452 - 2530258 |
| 12 | நாகப்பட்டினம் | 04365 -252700 | 04365 - 253045 |
| 13 | நாமக்கல் | 04286 - 281101 | 04286- 280230 |
| 14 | நீலகிரி | 0423 - 2442344 | 0423 - 2443392 |
| 15 | பெரம்பலூர் | 04328 - 225700 | 04328 - 224122 |
| 16 | புதுக்கோட்டை | 04322 - 221663 | 04322 - 222270 |
| 17 | இராமநாதபுரம் | 04567 - 231220 | 04567 - 230466 |
| 18 | சேலம் | 0427 - 2452244 | 0427 - 2313213 |
| 19 | சிவகங்கை | 04575 - 241466 | 04575 - 240426 |
| 20 | தஞ்சாவூர் | 04362 - 230102 | 04362 - 258501 |
| 21 | தேனி | 04546 - 254762 | 04546 - 254368 |
| 22 | திருவாரூர் | 04366 - 223344 | 04366 - 224280 |
| 23 | தூத்துக்குடி | 0461 - 2340600 | 0461 - 2325606 |
| 24 | திருப்பூர் | 0421 - 2218811 | 0421 - 2218220 |
| 25 | திருச்சிராப்பள்ளி | 0431-2415358 | 0431 - 2413796 |
| 26 | திருநெல்வேலி | 0462 - 2500828 | 0462 - 2501722 |
| 27 | திருவள்ளூர் | 044 - 223344 | 044 - 27663912 |
| 28 | திருவண்ணாமலை | 04175 - 233333 | 04175 - 233810 |
| 29 | வேலூர் | 0416 - 2252345 | 0416 - 2252663 |
| 30 | விழுப்புரம் | 04146 - 222450 | 04146 - 222288 |
| 31 | விருதுநகர் | 04562 - 252525 | 04562 - 252701 |
| 32 | அரியலூர் | 04329 - 223351 | 04329 - 228516 |

**இளம் வயது திருமணத்தை தவிர்க்க அரசின் நலத் திட்டங்கள்**

பெண்களுக்கு கல்லூரி வரை இலவசக் கல்வி; மேல்நிலைப்பள்ளி கல்வி பயிலும் மாணவியருக்கு இலவச மிதிவண்டி; ஆறாம் வகுப்பு முதல் +2 கல்வி வரை படிக்கும் மாணவியருக்கு ஊக்கத் தொகை ரூ. 1000/- ; கல்லூரியில் படிக்கும் மாணவியருக்கு ஊக்கத் தொகை ரூ. 2000/-; கல்லூரி கல்வி வரை இலவச பேருந்து சலுகை; வேலைவாய்ப்பில் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

பத்தாம் வகுப்பு வரை படித்த 18 வயது முடிந்த பெண்ணுக்கு அரசின் திருமண உதவித் தொகை ரூ. 25,000/- மற்றும் 1/2 பவுன் தங்க தாலி; பட்டம் அல்லது பட்டய படிப்பு முடித்த 18 வயது முடிந்த பெண்களின் திருமண உதவித் தொகை ரூ. 50,000/- மற்றும் 1/2 பவுன் தங்க தாலி வழங்கப்படுகிறது.

மேலும் ஒன்றோ அல்லது இரண்டு பெண் குழந்தைகளுடன் தாய்மார்கள் குடும்ப நல அறுவை சிகிச்சை மேற்கொண்டால் 'பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்ட'த்தின் கீழ் உதவித் தொகை முறையே ரூ. 50,000/- மற்றும் ரூ. 25,000/- குழந்தைகளின் பெயரில் தேசிய சேமிப்பு பத்திரமாக வழங்கப்படுகிறது.

கருவுற்ற தாய்மார்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி 'மரு.முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 6,000/- மற்றும் 'ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ. 700/- வழங்கப்படுகிறது.

**குழந்தைத் திருமணங்களைத் தடுக்க ஆசிரியர்களின் கடமை**

குழந்தைத் திருமணத்தின் பின் விளைவுகளை பற்றி 8 முதல் 12ஆம் வகுப்பு குழந்தைகளுக்கு பள்ளியில் புரிய வைத்தல் வேண்டும்; 3 நாட்களுக்கு மேல் பள்ளிக்கு வருகை தராத பெண் குழந்தைகளின் வீடுகளுக்குச் சென்று விசாரிக்க வேண்டும்; குழந்தைத் திருமணம் பற்றி முன் கூட்டியே தகவல் தெரிவித்தல் அல்லது நடந்த பின் புகார் தெரிவித்தல் வேண்டும்.

திருமண வயது ஆணுக்கு 21 பெண்ணுக்கு 18 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் மருத்துவ ரீதியாக ஆணுக்கு 25 வயதிலும், பெண்ணுக்கு 21 வயதிலும் திருமணம் செய்து வைத்தல் நல்லது.

**நம்மால் முடியும்**

நம் பகுதியில் குழந்தைத் திருமணம் எனும் அவலம் நீங்கி, அனைத்து குழந்தைகளும் நல்ல கல்வி கற்று சிறந்த வாழ்க்கையினை பெற்றிட நாமும் உறுதுணை புரிவோம். ■ (முற்றும்)

சிறுகதை

## ஒழுக்கம் தந்த உயர்வு

நா. மல்லிகா, கணக்காளர்,
புதுவாழ்வு திட்டம்,
வி. காளியாபுரம், கோவை மாவட்டம்.

ஒரு ஊரில் முருகன், கந்தன் என இரண்டு நண்பர்கள் இருந்தனர். அதில் முருகன் குறைவாகப் படித்தவன். கந்தன் அதிகமாகப் படித்தவன். இருவரும் வேலை தேடி வந்தனர். அப்பொழுது ஒரு நிறுவனத்தில் கந்தனுக்கு அதிக படிப்பு இருந்ததினால் மேலாளர் வேலையும் முருகனுக்கு குறைந்த படிப்பு இருந்ததினால் உதவியாளர் வேலையும் கிடைத்தது. இருவரும் கிடைத்த வேலையை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டு பணியைத் தொடங்கினர்.

சிலமாதம் ஓடியது. முருகன் தனது வேலையில் முழு மனதாகவும், உற்சாகத்துடனும், ஒழுக்கத்துடனும், சலிப்பின்றி மனநிறைவுடன் வேலை செய்தான். அவனது பணி சிறப்பாக இருந்ததால் உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்றான்.

ஆனால் கந்தனோ 'தான் அதிகம் படித்தவன், எனக்கு எல்லாம் தெரியும்' என்ற நினைப்புடன் தன்னுடைய வேலையினை ஏனோ தானோஎன்று செய்தான். அதனால் உயர் அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளானான். இதை அறிந்த முருகன், தனது நண்பன் கந்தனுக்கு அறிவுரை கூறினான். ஆனால் கந்தனோ 'நீ என்ன என்னை விட அதிகம் படித்தவனா? எனக்கு அறிவுரை கூற' என முகத்தில் அடித்தாற்போல் கூறினான். முருகனும் வருத்தத்துடன் சென்றான்.

வருடம் முடிந்தது. அந்த வருடத்திற்கான வரவு - செலவு பற்றிய கணக்கெடுப்பு தொடங்கியது.முருகன் தனது வரவு-செலவு விபரங்கள் அனைத்தையும் தெளிவாகவும், பணிவாகவும் செய்து முடித்துக் கொடுத்தான். அதைப் பார்த்த இந்த நிறுவனத்தின் முதலாளி முருகனைப் பாராட்டி, 'உனது படிப்பிற்கும், நீ செய்த வேலைக்கும் சம்மந்தமே இல்லை. உன் திறமையால்தான் இவ்வளவு சிறப்பாக செய்திருக்கிறாய்' எனக் கூறி தட்டிக் கொடுத்தார்.

அதேசமயம் கந்தன் கொடுத்த வரவு-செலவு விவரங்கள் அனைத்தும் மிகவும் தவறாகவும், முறைகேடாகவும் இருந்தது. இதுகுறித்து முதலாளி கேட்டதற்கு ஆணவத்துடன் பதில் கூறினான். இதைக் கண்டு கடும் கோபம் கொண்ட நிறுவன முதலாளி 'நீ என் நிறுவனத்தில் உதவியாளர் வேலைக்கு கூட தகுதியானவன் இல்லை' என்று கூறி கந்தனை வேலையை விட்டு நிறுத்தினார். இதனைப்பார்த்த முருகன் மிகவும் வருந்தினான். முதலாளி முருகனைப் பார்த்து, 'முருகா இன்று முதல் நீதான் இந்த நிறுவனத்திற்கு மேலாளர்' என்று கூறினார். இதைக் கேட்டு வியப்படைந்த முருகன், முதலாளியைப் பார்த்து 'ஐயா இந்த வேலைக்கு ஏற்ற படிப்பு என்னிடம் இல்லையே?' என்றான்.

அதற்கு முதலாளி 'முருகா, உனது படிப்பு குறைவாக இருந்தாலும் உனக்கு திறமை அதிகம் நிச்சயம் இந்தப் பொறுப்பை உன்னால் சிறப்பாக செய்ய முடியும்' என்று கூறி வாழ்த்தினார் முருகன் முதலாளிக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டான். ■

## உங்களுடன்...

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் 'தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்' இதழ் விளங்கி வருவதை அனைவரும் அறிவர். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். முற்றம் இதழின் வெளியீட்டு செலவினங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால், வரும் 2015 ஏப்ரல் முதல் முற்றம் இதழின் சந்தாத் தொகை சற்று உயர்த்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். உங்களின் ஆதரவு என்றும் எங்களுக்கு உண்டு என்பதை நாங்கள் அறிவோம். எனவே முற்றம் வாசகர்கள் தொடர்ந்து எங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டுகிறோம்

- ஆசிரியர், முற்றம்

வாழ்வாதாரத்தை

# வளமாக்கும் வங்கி சேவைகள்

## வட்டி மானியம் – பிரிவு 2 – மாவட்டங்கள்

**தவணைக் காலம் / நேரம் தவறாது சரியாக கடனை செலுத்திய மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மட்டும் வட்டி மானியம் வழங்கப்படும்.**

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கடந்த இதழில் வட்டி மானியம் பெறுவதற்கான தகுதிகள் மற்றும் வழங்கப்படும் சலுகைகள், முதல் கட்ட பிரிவு வட்டி மானியம் வழங்கப்படும் மாவட்டங்கள் மற்றும் வட்டி மானியம் பெறுவது குறித்த பல்வேறு விபரங்களை தெரிந்து கொண்டோம். இந்த இதழில் வட்டி மானியம் குறித்த பல விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

**வட்டி மானியத் திட்டத்தின் முக்கிய சிறப்பு அம்சங்கள் என்ன?**

வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கும். அந்த கணக்குகளில் நேரம் தவறாது திரும்ப செலுத்தும் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்கப்படும். வங்கியில் நடைமுறையில் உள்ள வட்டிக்கும், 7 சதவிகிதம் வட்டிக்கும் உள்ள வித்தியாசம் வட்டி மானியமாக வழங்கப்படும்.

**அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த வட்டி மானியம் பெற தகுதி பெறுமா?**

'தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின்' கீழ் இணைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் பெற தகுதி பெறும்.

**தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தகுதியின்படி இயங்கும் சுய உதவிக் குழு என்றால் என்ன?**

மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள உறுப்பினர்களில் 70 சதவிகித உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களாகவோ அல்லது மக்களாய்வு முறைப்படி (PIP) தெரிவு செய்யப்பட்ட மிகவும் ஏழை குடும்பங்களாக இருத்தல் வேண்டும். அதற்கு கிராம சபை ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.

இக்குழுக்கள் 'தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் குழுவாகும். பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் துவங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள் அனைத்தும் 'தேசிய ஊரக வாழ்வாதார' தகுதிப்படி இயங்கும் குழுக்களாகும்.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (அ) அரசு நிறுவனங்கள் மூலம் உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் மட்டும்தான் வட்டி மானியம் பெற தகுதி வாய்ந்தவைகளா?**

மகளிர் சுய உதவிக் குழுக்களை யார் உருவாக்கி இருந்தாலும், அது தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தகுதிபடி இருந்தால் அந்த குழுக்கள் வட்டி மானியத் திட்டத்திற்கு தகுதி பெறும் குழுக்களாகும்.

**10 உறுப்பினர்களுக்கு கீழ் உள்ள சுய உதவிக் குழுக்கள், இந்த திட்டத்தில் பயன் பெற தகுதி பெறுமா?**

குழுவின் உறுப்பினர்கள் 10க்கும் குறைவாக இருந்தாலும், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தகுதியின்படி இருந்தால், அந்த குழு வட்டி மானியம் பெற தகுதி வாய்ந்ததாகும்.

**பிரிவு 2ன் கீழ் வரும் மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், வங்கிகளிலிருந்து கடன் கொடுக்கும் நாளிலிருந்தே 7% வட்டி விகிதத்தில் கடன் பெற முடியுமா?**

முடியாது. வங்கிகள் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில்தான் கடன் வழங்கும். நேரம் தவறாது சரியாக கடனை செலுத்திய மகளிர் சுய உதவி குழுக்களுக்கு மட்டும் வட்டி மானியம் வழங்கப்படும்.

**தவணை தவறாது கடனை திரும்ப செலுத்திய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 3% கூடுதல் வட்டி மானியம் கிடைக்குமா?**

இல்லை, பிரிவு 2ன் கீழ் வரும் மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு, 3% கூடுதல் வட்டி மானியம் இல்லை.

**பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் பொருளாதாரக் கடன் பெற்று, நிலுவையில் உள்ள சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் பெற தகுதி இல்லை. எனினும் அரசு மானியத்துடன் வாங்கிய பழைய கடன்களை வெற்றிகரமாக திரும்ப செலுத்திய பிறகு புதிய கடன்கள் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத் தில் பயன் அடைய தகுதி வாய்ந்தவை.**

### தவணை காலம்  தவறாது திரும்ப செலுத்துவது என்பது எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

ஒரு கணக்கு, பின் வரும் காரணிகளை பூர்த்தி செய்வதாக இருந்தால், அந்தக் கணக்கு நேரம் (காலம்) தவறாது திருப்பி செலுத்திய கணக்காகக் கருதப்படும்

**(அ) ரொக்கக் கடன் அளவு** (Cash Credit Limit)

நிலுவைத் தொகை, கடன் வரம்பு (Limit) (அ) பணம் எடுக்கும் அளவுக்கு (Drawing Power) அதிகமாக, தொடர்ந்து 30 நாட்களுக்கு மேல் இருத்தல் கூடாது. அடிக்கடி வரவு / செலவு பதிவு செய்திருக்க வேண்டும்.

குறைந்தபட்சம் ஒரு வாடிக்கையாளராவது அந்த மாதத்தில் பணம் திருப்ப செலுத்தத் தூண்டப்பட்டிருக்க வேண்டும். வாடிக்கையாளர் தூண்டிய கடன் இந்த மாதத்தின் பற்று வட்டியை பூர்த்தி செய்ய போதுமானதாக இருத்தல் வேண்டும்.

விளக்கவுரை :

**வாடிக்கையாளரால் செலுத்தப்பட்ட வரவு**

சுய உதவிக் குழுக்கள் ரொக்கக் கடன் கணக்கில் குறைந்தபட்சம், வங்கியால் 7%ல் விதிக்கப்பட்ட வட்டியை ஒவ்வொரு மாதமும், தவறாமல் செலுத்தியதை நேரம் (காலம்) தவறாது செலுத்தியவராகக் கருதப்படுவார்.

**(ஆ) தவணைக் கடன்கள்** (Term Loan)

கடன் தொகை மற்றும் வட்டியை திரும்ப செலுத்த வேண்டிய உரிய தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் திரும்ப செலுத்துவது.

விளக்கவுரை

சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணையை (EMI) திரும்ப செலுத்தும் அட்டவணைப்படி சுய உதவிக் குழுக்கள் கண்டிப்பாக திரும்ப செலுத்த வேண்டும். மாதாந்திர EMIயை செலுத்த வேண்டிய உரிய தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்தி இருந்தால் அந்தக் காலம் வரை நேரம் தவறாது திரும்ப செலுத்தியவராகக் கருதப்படுவர்.

### 2013-14ல் வழங்கிய புதிய கடன்களுக்கு மட்டும்தான் வட்டி மானியம் கிடைக்குமா?

01.04.2013ஆம் தேதியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பெயரில் நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் அன்றோ (அ) அதன் பிறகு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் எல்லாம் இத்திட்டத்திற்கு தகுதி பெறும். வட்டி மானியம் நிலுவையில் உள்ள கடனில் ரூ. 3 இலட்சம் வரைதான் வழங்கப்படும்.

### ஒரு மகளிர் சுய உதவிக் குழு, ரூ. 3 இலட்சத்திற்கு மேல் கடன் வாங்கி னால் அந்த குழு வட்டி மானியம் பெற தகுதி பெறுமா?

ரூ. 3 இலட்சத்திற்கும் மேல் வங்கிக்கடன்வாங்கி இருந்தால், ரூ. 3 இலட்சம் வரையில் உள்ள கடனுக்கு வட்டி மானியம் கிடைக்கும். ரூ. 3 இலட்சத்திற்கு மேல் நிலுவையிலுள்ள கடன் தொகைக்கு வட்டி மானியம் கிடைக்காது. அந்தத் தொகைக்கு வங்கியின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதத்தில் திரும்பச் செலுத்த வேண்டும்.

### பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் துவக்கப் பட்ட சுய உதவிக் குழுக்கள் இந்த குழு வட்டி மானியத் திட்டத்தில் பயன் பெற தகுதி பெறுமா?

பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் பொருளாதாரக் கடன் பெற்று, நிலுவையில் உள்ள சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் பெற தகுதி இல்லை. எனினும் அரசு மானியத்துடன் வாங்கிய பழைய கடன்களை வெற்றிகரமாக திரும்பச் செலுத்திய பிறகு புதிய கடன்கள் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் இந்தத் திட்டத்தில் பயன் அடைய தகுதி வாய்ந்தவை.

(மேலும் பல விபரங்கள் அடுத்த இதழில்)

# முதலுதவி செய்வது எப்படி?

விபத்துக்கள் யாருக்கு எங்கே எப்போது நடக்கும் என்று சொல்ல முடியாது. யாராவது காயமடைந்தால் அல்லது திடீரென ஆபத்தான உடல் நலக்குறைவு ஏற்பட்டால் உடனே பக்கத்தில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கும். என்னதான் பக்கத்தில் மருத்துவமனை இருந்தாலும் அங்கே கொண்டு சென்று சேர்ப்பதற்குள் நோயாளிக்கு வாழ்வா? சாவா? என்ற போராட்டத்தில் எது வெல்லும் என்று என தெரியாது. இந்த நேரம் நோயாளிக்கு மிக முக்கியமான நேரம். அப்போது நாம் அருகே இருந்தால் என்ன உதவுகள் செய்த அவரைக் காப்பாற்ற முடியும் எனத் தெரிந்து வைத்திருப்பது மிகவும் நல்லது.

ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு முதலுதவிப் பெட்டி இருக்க வேண்டும். அதில் என்னென்ன பொருட்கள் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்த கொண்டு சேகரித்து வைத்துக்கொள்ளுங்கள். முதலுதவிக்குரிய மருந்துகளை வீட்டில் எங்காவது ஒரு மூலையில் வைத்து விட்டு அவசர மாகத் தேவைப்படும் நேரங்களில் தேடிக் கொண்டிருக்கக் கூடாது. எப்போதும் கண்ணில் படும்படியான இடத்தில் அதற்கென்று ஒரு பெட்டியில் வைப்பது முக்கியம். அதைப் பூட்டு போட்டு பூட்டி வைக்காதீர்கள். குழந்தைகள் கைக்கெட்டும் இடத்தில் வைக்காதீர்கள். கெட்டுப்போன, தேதி முடிந்த மருந்துக்களை அவ்வப்போது சரி பார்த்து பத்திரமாகக் களைந்து விடவும். ஆம்புலன்ஸ் மற்றும் பக்கத்தில் உள்ள அவசர மருத்துவ உதவி மையங்களின் தொலைபேசி எண்ணை அதில் எழுதி வையுங்கள். ஒவ்வொரு வாகனத்திலும் முதலுதவிப் பெட்டி இருக்கும். தேவைப்படும் போது அதை மறந்து விடாதீர்கள்.

முதலுதவிப் பெட்டியில் என்னென்ன பொருட்கள் இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வது அவசியம்.

சுத்தமான ஒட்டக் கூடிய பேண்டேஜ்கள் – பல அளவுகளில்; பேண்டேஜ் துணி ரோல்கள்; ஒட்டும் டேப்புகள்; முக்கோண மற்றும் ரோலர் பேண்டேஜ்கள்; பஞ்சு (1 ரோல்); பேண்ட் எய்ட் – பிளாஸ்டர்; கத்தரிக்கோல்; சிறிய டார்ச்; தெர்மோ மீட்டர்; லேடெக்ஸ் கையுறைகள் (2 ஜோடிகள்); சிறிய கிடுக்கிகள்; ஊசி; ஈரப்பதம் கொண்ட டவல்கள், சுத்தமான உலர்ந்த துணிகளின் துண்டுகள்; ஆண்டிசெப்டிக் (சவ்லான், டெட்டால்); பெட்ரோலியம் ஜெல்லி டியூப்; ஊக்குகள் – பல அளவுகளில்; சுத்தப்படுத்தும் கரைசல் அல்லது சோப்.

மருந்துகள்

ஆஸ்பிரின் அல்லது பாரசிட்டமால் வலி நிவாரணிகள்; வயிற்றுப் போக்கை நிறுத்தும் மருந்து; பூச்சிக்கடி, தேனீக்கள் கொட்டுதல் ஆகியவற்றுக்கான ஆண்டிஹிஸ்டமீன் க்ரீம் (Calamine lotion); ஆண்டாசிட் (வயிற்றுப் போக்குக்கு); லக்ஸேட்டிவ்; ஆண்டிபயாடிக் ஆயின்மெண்டுகள்; தீப்புண்ணுக்கான களிம்பு; Hydrogen peroxide; Children's acetaminophen; Smelling salt போன்ற மருந்துகள் முதலதவிப் பெட்டியில் இருக்க வேண்டும்.

அவசர நிலையில் உள்ள காயம் பட்ட நோயாளிக்கு முதலில் சுவாசம் தடைபடாமல் பார்த்துக் கொள்வது மிக முக்கியம். நாக்கு அல்லது வாயிலிருந்து வரும் கோழை மூச்சுத் திணறலை உண்டாக்கலாம். நோயாளிகளால் சரியாக சுவாசிக்க முடியாவிட்டால் உடனே செயற்கை சுவாசம் கொடுக்க வேண்டியது அவசியம்.

நோயாளிகளின் நாடித்துடிப்பு சீராக இருக்கிறதா? இரத்தம் அதிகமாக வெளியேறுகிறதா? எனப் பார்க்கவும். இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தாலோ, நோயாளி விஷம் சாப்பிட்டிருந்தலோ, இதயம் அல்லது மூச்சு நின்றாலோ விரைந்து செயல்பட வேண்டும். பாதிக்கப்பட்டவரின் வினாடிகள் எண்ணப்படும் நேரம் அது. ■

(தொடரும்)

# குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு...

– கோ. பிரம்மநாதன்

நம்மில் பலர், குழந்தைகளின் மலத்தை மிகவும் சாதாரணமானதாக நினைத்து விடுகிறோம். சிலர், குழந்தையின் மலமோ, சிறுநீரோ புனிதமானது என்றும், தங்கள் மீது படுவதினால் தாங்கள் பாக்கியம் செய்தவர்கள் என்றும் கூட சிலாகித்துக் கொள்வார்கள். வேறு சில வீடுகளில், குழந்தைகள் எங்கு வேண்டுமானாலும் குத்த வைத்து மலம் கழிக்க அனுமதிப்பார்கள். பிறகு காகிதத்தை கிழித்து, மலத்தை வழித்தெடுத்து, வெளியே தூக்கியெறிவார்கள். கைகளைக் கழுவிக் கொண்டு அடுத்த வேலைக்குச் செல்வார்கள். இவை அனைத்தும் ஆபத்துக்குரியவை என்று இன்றைய மருத்துவம் தெரிவிக்கிறது. பெரியவர்களின் மலத்தை விட குழந்தைகளின் மலத்தில்தான் கிருமிகள் அதிகமாக இருக்கின்றன. அதிலும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் இருக்கும் வீடுகளில், ஒரு குழந்தையின் மலம் மற்ற குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தானதாகவே ஆகி விடுகிறது.

குழந்தைகளின் மலத்தை அகற்றும் தாய்மார்கள், சாதாரணமாக கைகளைக் கழுவி விட்டு அதே கையோடு சமையலையும் கவனிக்கும் பட்சத்தில், மலத்திலுள்ள கிருமிகள் உணவோடு கலந்து விடும் வாய்ப்பும் உண்டு. வீட்டுக்குள்ளேயே எங்கு வேண்டுமானாலும் மலம் கழிக்கும் குழந்தைகளுக்கு, தரை கழுவப்படாத பட்சத்தில் மலக்கிருமிகள் தரையோடு தரையாக ஒட்டிக் கிடக்கவும், குழந்தைகள் தவழும் போது, அதன் மூலம் குழந்தைகளுக்குப் பரவவும் வாய்ப்பு உண்டு.

இவை எல்லாவற்றையும் கிராமங்களில் மட்டுமல்ல நகரங்களிலும் எந்தப் பெற்றோரும் கண்டு கொள்வதே இல்லை. நம் ஊர்களில், சற்று வளர்ந்த குழந்தைகள் வெளியே உள்ள சாக்கடையில் மலம் கழித்து விட்டு வீட்டுக்குள் வந்து கழுவிக் கொள்வார்கள். அந்த மலத்தை மிதித்து விட்டு வீட்டுக்குள் வந்து விட்டாலோ அல்லது சாக்கடையில் ஓடும் நீர் தேங்கிக் கிடந்தாலே, அதனால் துர்நாற்றமும், கிருமி தாக்குதலும் நிச்சயம் இருக்கும்.

இவற்றின் பாதிப்புகள் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு போன்ற சிறு உடல்நலக்குறைவு மட்டுமின்றி குழந்தைகளின் உடல் வளர்ச்சி மற்றும் மூளை வளர்ச்சி ஆகியவற்றையும் கூட பெரிதும் பாதிக்கும். வளர்ச்சியில் உள்ள இந்த பாதிப்பு உடனடியாகத் தெரிய வாய்ப்பு இல்லை. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் மட்டுமே நம்மால் உணர முடியும்.

சுகாதாரம் என்பது குழந்தைகளின் உடல் நலத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது. சரி, இதற்கு என்னதான் வழி?

குறைந்தபட்சம் குழந்தைகள் இருக்கும் வீட்டிலாவது கழிப்பறை இருக்க வேண்டும்.

குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களும் கழிப்பறையை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

கழிப்பறையைப் பயன்படுத்திய பின்னர், சோப்புப் போட்டு கைகளைக் கழுவிய பின்னரே எந்தப் பொருளுடனும் புழங்க வேண்டும். (தவழும் நிலைக்கு வளர்ந்து விட்டக் குழந்தைகள், தரையில் நடக்க ஆரம்பித்து விட்ட குழந்தைகள் எங்கு வேண்டுமானாலும் கைகளை வைக்கக் கூடும் என்பதை கவனத்தில் வையுங்கள்)

குழந்தைகள் உட்காரப் பழகிய உடனேயே கழிப்பறையில் தரையிலோ அல்லது கழிப்பறை கோப்பை அருகிலோ அமரச் செய்து மலம் கழிக்க பழக்க ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பத்தில் அழும் குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக பழகிக் கொள்ளும். (கழிப்பறையை பயன்படுத்த ஆரம்பித்த குழந்தைகள் எக்காரணத்தைக் கொண்டும் திறந்தவெளியில் மலம் கழிக்க மாட்டார்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்)

குழந்தைகளுக்கான மலம் கழிக்கும் 'சிறு கழிப்புக் கோப்பைகளும்' தற்போது கடைகளில் விற்கப்படுகின்றன. அவற்றில் அமரச் செய்தும் கூட குழந்தைகளை பழக்கப்படுத்தலாம். அந்த 'கழிப்புக் கோப்பைகளையும்' கழிப்பறையிலேயே வைத்து சுத்தம் செய்ய வேண்டும். அவற்றைச் சுத்தம் செய்த பின்பும் உங்கள் கைகளை சோப்பு போட்டுக் கொள்ள வேண்டும்.

வீட்டினுள் குழந்தைகள் மலம் கழித்து விட்டால் மலத்தை பாதுகாப்பாக அகற்றி விட்டு, குழந்தையையும், உங்கள் கைகளையும் சோப்பினால் சுத்தம் செய்யவும். முக்கியமாக மலம் கழித்த இடத்தையும் கிருமிநாசினியைக் கொண்டு தண்ணீர் விட்டுக் கழுவி விடுவது அவசியம்.

மேற்கூறிய ஆலோசனைகள் அனைத்தும் நம்முடைய குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குரியவை என்பதை நினைவில் வைப்போம். அவர்களுடைய ஆரோக்கியம் சத்தான உணவில் மட்டும் இல்லை. சுகாதாரமான வாழ்க்கையிலும் அடங்கியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வோம்.

மனிதர்களின் மலம் முக்கியமாக குழந்தையின் மலமும் ஆபத்தானதுதான் என்பதை தெளிவாகத் தெரிந்து கொண்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னிறுத்துவோம். ■

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் குறித்த மூன்றாவது உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயல்பாடுகள் குறித்த மூன்றாவது உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை ஆமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில் 29.01.2015 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க உயர்நிலை அதிகாரம் பெற்ற குழுவின் உபதலைவர் மற்றும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., அவர்கள் இக்கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார்.

தமிழக அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 6000 கோடி ரூபாய் கடன் வழங்க உத்தரவிட்டுள்ளது. இந்தத் தொகையினைப் பயன்படுத்தி மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்கள் தொடங்கத் தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்புடைய துறைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவை மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான திறன் பயிற்சிகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளை செய்து தர வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**தமிழக அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 6000 கோடி ரூபாய் கடன் வழங்க உத்தரவிட்டுள்ளது. இந்தத் தொகை மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்கள் தொடங்க வழங்கப்படும்.**

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் செயலாளர் மற்றும் உறுப்பினர் செயலாளர் திரு. ககன் தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் இக்குழுவின் உறுப்பினர்களான நிதித்துறை முதன்மைச் செயலாளர் உட்பட பல்வேறு அரசுத் துறைகளின் செயலாளர்கள், பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சித் துறையின் திட்ட இயக்குநர், இந்திய தொழில் கூட்டமைப்பு, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மாநில அளவிலான வங்கிகளின் பிரதிநிதிகள், ரிசர்வ் வங்கியின் பொது மேலாளர், சென்னை நபார்டு வங்கி தலைமைப் பொது மேலாளர் மற்றும் தமிழ்நாடு திறன் வளர்ப்பு இயக்கத்தின் இயக்குநர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்களும், கூடுதல் திட்ட இயக்குனநர்களும் மேற்கொண்டனர். ■

## மதுரை

# மண்டல அளவிலான வங்கியாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க செயலாக்கத்தின் கீழ் 2015–16ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் தயார் செய்தல் தொடர்பான விளக்கக் கருத்துப் பயிற்சி மற்றும் 2014–15ம் ஆண்டிற்கான சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு சாதனை, செயல் திட்டம் தொடர்பாக மண்டல அளவிலான வங்கியாளர்கள் கூட்டம் 02.02.2015 அன்று மதுரை பப்பிஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க முதன்மை செயல் அலுவலர் திருமதி வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். முன்னதாக மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. அ. பாண்டியன் அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் மாநில முன்னோடி வங்கி மேலாளர், மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாநில ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்கள், உதவிப் பொது மேலாளர்கள் (நபார்டு வங்கி) மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

## வேலூர் விற்பனை மையம் திறப்பு விழா

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் வகையில் வேலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மதி விற்பனை மையத்தினை (Kiosk) மாவட்ட ஆட்சியர் முனைவர். இரா. நந்தகோபால், இ.ஆ.ப., அவர்கள் 13.02.2015 அன்று திறந்து வைத்தார்.

இவ்விழாவில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் இயக்குநர் திருமதி. க. லோகநாயகி, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

## கோயம்புத்தூர்

# கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 2014–15ஆம் ஆண்டிற்கான, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்ட மாவட்ட அளவிலான கலாச்சாரப் போட்டிகள் 10.01.2015 அன்று கோவை நல்லாயன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதில் ரங்கோலி, பாட்டு, நாடகம், பேச்சுப் போட்டி, ஓட்டப் பந்தயம், பந்து எறிதல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், வளை பந்து எறிதல் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. கலாச்சாரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். இப்போட்டிகளில் 225 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 115 உறுப்பினர்கள் பரிசுகளை வென்றனர். ■

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்தும், டெங்கு காய்ச்சலை முற்றிலும் ஒழித்திட எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும், சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் 29.01.2015 அன்று நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி. பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் திரு. விஜயகுமார், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி இயக்குநர் திரு. க. பாஸ்கரன், இ.ஆ.ப., மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய செயல் இயக்குநர் திரு. என். சந்தீப், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஆனந்த், இ.ஆ.ப., உட்பட அனைத்து மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி துறை திட்ட இயக்குநர்கள், பேரூராட்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

## கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகை கலாச்சாரப் போட்டிகள் வேலைவாய்ப்பு முகாம்

சிவகங்கை மாவட்டத்தில் 09.01.2015 அன்று சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுக்கான மாவட்ட அளவிலான கலாச்சாரப் போட்டிகள் நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திரு. து. முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 10.01.2015 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 27 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக தலா ரூபாய் 1 இலட்சம் வீதம் ரூபாய் 27 இலட்சத்திற்கான காசோலைகள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது.

23.01.2015 அன்று சிவகங்கையில் நடைபெற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் துவக்கி வைத்தார். இந்த முகாமில் 957 இளைஞர்கள் கலந்து கொண்டனர். 16 நிறுவனங்கள் பங்கு கொண்டு தங்களின் நிறுவனத் திற்குத் தேவையான 110 நபர்களுக்கு வேலைவாய்ப் பினை வழங்கின.

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. ச. சரோஜா தேவி, சிவகங்கை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. வெ. அசோக்குமார் மற்றும் பிற துறை அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர் கள் கலந்து கொண்டனர்.

# சுய உதவிக் குழுவினருக்கு ரூ. 7.75 கோடி கடனுதவி

விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் மற்றும் இரும்பை ஊராட்சிகளில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டம் சார்பில் சுய உதவிக் குழு பயனாளிகளுக்கு வங்கிக் கடன்கள் மற்றும் ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சி 14.04.2015 அன்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிற்றம்பலம் ஊராட்சியைச் சேர்ந்த 187 சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 187 பயனாளிகளுக்கு ரூ. 7 கோடியே 16 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளையும், காட்டு நெமிலி, ஏமம், மற்றும் வெல்லையூர், செஞ்சி, உளுந்தூர்பேட்டை, காணை, ரிஷிவந்தியம், முகையூர், சங்கராபுரம், வல்லம், ஓலக்கூர், கோலியனூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 37 பயனாளிகளுக்கு கடனுதவியாக தலா ரூ. 1 இலட்சத்திற்கான காசோலைகளையும், காட்டுராம்பாக்கம், ஒழிந்தியாம்பட்டு, வானூர் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 5 சுய உதவிக் குழுக்களுக்கு விதைப்பயிற்நி செய்வதற்காக ரூ. 20 ஆயிரம் மதிப்பிலான காசோலை உட்பட மொத்தம் 237 பயனாளிகளுக்கு ரூ. 7 கோடியே 88 இலட்சத்து 11 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர் அவர்களும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களும் வழங்கினர்.

முன்னதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர் அவர்கள், வானூர் ஊராட்சி ஒன்றியம் ஆகாசம்பட்டு ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் நடைபெற்று வரும் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. பிரபுசங்கர், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சிமுகமை திட்ட இயக்குநர் திரு. கோ. ராதா, மகளிர் திட்ட அலுவலர் திரு. ஆர். மணி மற்றும் பிற துறை உயர் அலுவலர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தமிழக அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 6000 கோடி ரூபாய் கடன் வழங்க உத்தரவிட்டுள்ளது. இந்தத் தொகை மகளிர் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு தொழில்கள் தொடங்க வழங்கப்படும்.**

## குடியரசு தின விழா

நம் நாட்டின் 66வது குடியரசு தினம் 26.01.2015 அன்று நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. சென்னை மெரீனா காமராஜர் சாலையில் நடைபெற்ற விழாவில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

வண்ணமிகு இவ்விழாவில் முப்படை வீரர்கள் மற்றும் பல்வேறு காவல் பிரிவுகளின் அணிவகுப்பும், தமிழக அரசின் பல்வேறு துறைகளின் சாதனைகளை விளக்கும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடைபெற்றன. பின்னர் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், கிராமியக் கலைஞர்களின் நாட்டுப்புற நடனமும் காண்போர் மனதைக் கவரும் வகையில் இடம் பெற்றிருந்தன.

வீர தீரச் செயல் புரிந்த மீட்பு மற்றும் தீயணைப்பு, காவல் துறையினர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட 5 பேருக்கு அண்ணா பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்க விருது உள்ளிட்ட விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். ■

# நம் மாவட்டம்

கடலூர்

## விற்பனை மையம் திறப்பு விழா

கடலூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக நிலையான விற்பனை மையம் (Kiosk) அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தினை சமீபத்தில் மாண்புமிகு தமிழக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பி. காஞ்சனா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விற்பனை அரங்கில் விற்பனை செய்யப்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்பு பொருட்களை அனைவரும் வாங்கி மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார் ■

திருவண்ணாமலை

## வேலைவாய்ப்பு முகாம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது கிராமப்புற ஏழை இளைஞர்களை மேம்படுத்தும் பொருட்டு, ‘தீனதயாள் உபாத்தியா கிராமிய கவுசல்ய யோசனா’ திட்டத்தின் மூலம் ஒன்றிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம் 10.01.2015 முதல் 31.01.2015 வரை ஐந்து கட்டங்களாக திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார மாவட்ட திட்ட இயக்குனர் திரு. எஸ். எஸ். தனபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் கள ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். ■

திருநெல்வேலி

# டெங்கு விழிப்புணர்வு மற்றும் தொற்று நோய் தடுப்பு குறித்த மண்டல அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம்

டெங்கு விழிப்புணர்வு மற்றும் தொற்று நோய் தடுப்பு தொடர்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மூன்று மாவட்டங்கள் கொண்ட மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 27.01.2015 அன்று நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகத்துறை முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், மருத்துவ கல்வித்துறை இயக்குநர், மருத்துவ பணியின் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர், கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர்

## வேலைவாய்ப்பு முகாம்

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் இணைந்து இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமினை நடத்தின. 31.01.2015 அன்று திருப்பாசூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்ததுடன், அம்மையப்பர் டெக்ஸ்டைல்ஸ், டேஸ் அண்ட் எலக்ட்ரானிக்ஸ் ஆகிய 2 நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 16 நபர்களுக்கு பணி நியமன உத்தரவுகளையும் வழங்கினார். இந்த வேலைவாய்ப்பு முகாமில் 24 தனியார் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு வழங்க பங்கேற்றனர். சுமார் 2000க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு வேண்டி விண்ணப்பித்தனர். 492 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ■

# பூக்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மனநலம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்த புதுவாழ்வு திட்டம் சார்பில் இரண்டு நாடகங்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்த நாடங்களை அனைத்துப் பகுதியிலும் நடத்தி மனநலம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த இதழ்களில் முற்றம் இதழில் இடம் பெற்ற நாடகத்தின் தொடர்ச்சியினை இந்த இதழில் காணலாம்.

ஆசிரியர் : குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் (ஆசிரியர் கூறுவதை மாணவர்கள் திரும்பக் கூறல்)

ஆசிரியர் : சினிமா பாடல்கள் எல்லாம் எவ்வளவோ இருக்குது. அதுமாதிரி திருக்குறளையும் வேற மெட்டு வச்சு பாடலாம். சிவா நீ பாடு...

சிவா : கல்யாணந்தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா...

இல்ல ஓடிப்போயி கல்யாணந் தான் கட்டிக்கலாமா...

ஆசிரியர் : ச்சீ... உட்காருடா. பாடச் சொன்னா இப்படியா பாடுறது...

(இளவரசியின் பெற்றோர் வருகை)

பெற்றோர் : வணக்கம் டீச்சர்...

ஆசிரியர் : வணக்கம்மா... நானே உங்களைப் பார்க்கணும்னு நினைச்சேன். நீங்களே வந்திட்டீங்க...

அம்மா : என்னம்மா செய்யறது? 10 நாளா இந்தப் பொண்ணு தூங்க மாட்டேங்குது. சரியா சாப்பிடறதில்லை. யாருகிட்டேயும் பேசறது இல்லே. வீட்லதான் இப்படி இருக்கா. ஸ்கூல்ல எப்படி இருக்கானு உங்களப் பார்த்து கேட்கலாமுன்னு வந்தோம். சொந்தக்காரங்க வேற என்னன்னமோ சொல்லி பயமுறுத்தறாங்க...

ஆசிரியர் : உங்ககிட்டயும் பேச மாட்டேங்குறாளா? இங்கேயும் இப்படித்தான் இருக்குறா.. சரி என்ன ஆச்சின்னு அவ கூட படிக்கிற சிவாவைக் கேட்டுப் பார்க்கலாம்.. டேய் சிவா இந்தப் பொண்ணு ஏண்டா இப்படி இருக்கா?

சிவா : டீச்சர் அன்னிக்கு

நீங்க ஏ...ன்னு ஒரு ஏப்பம் விட்டீங்க இல்ல அதைப் பார்த்து பயந்து போயிருக்கும். இல்ல முட்டை மார்க் எடுத்த நான் பாஸ் மார்க் வாங்குனதை பாத்து அதிர்ச்சி ஆயிருக்கும் டீச்சர்.

ஆசிரியர் : நீ கூடத்தான் ஒன்னு விட்ட, அதெல்லாம் சொல்லிகிட்டு போடா போ... சாரி சார் அவங்க டீச்சரு லீவுல இருக்காங்க வந்தவுடனே கேட்டு சொல்லுறேன்.

அப்பா : என்னங்க டீச்சர் இப்படி பொறுப்பு இல்லாம பேசறீங்க. புள்ள 10 நாளா இப்படியிருக்கா, அப்பறம் பார்க்கலாம்னு சொல்றீங்க...

ஆசிரியர் : சாரி சார்... சாரி சார்... நான் உடனடியா பார்க்கிறேன்.

(தொடரும்)

## உலக நுகர்வோர் உரிமைகள் தினம் [மார்ச் 15]

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15ஆம் தேதியை தேசிய நுகர்வோர் உரிமைகள் நாள் (National Consumer Rights Day) கடைபிடிக்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜான். எப். கென்னடி, அமெரிக்க பாராளுமன்றத்தில் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாகவும், நுகர்வோர் உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் ஆற்றிய முக்கிய உரை 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி இடம் பெற்றது. அவ்வுரையே உலக அளவில் ஒரு நாட்டுத் தலைவர் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக ஆற்றிய முக்கிய உரையாகக் கணிக்கப்படுகின்றது.

1962ஆம் தேதி இடம்பெற்ற அவ்வுரை உலக அளவில் பெரிய அலைகளைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக 1962ஆம் ஆண்டு, ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 15ஆம் தேதியை உலக நுகர்வோர் உரிமைகள் நாள் ஆக பிரகடனப்படுத்தி அறிவிக்கப்பட்டது. ■

## உலக வன நாள் [மார்ச் 21]



இன்று உலகம் சந்திக்கும் பேராபத்தான உலக வெப்பமடைதலை (Global Warming) தவிர்க்க காடுகளின் பரப்பை அதிகரிப்பது மனித குலத்தின் இன்றியமையாத தேவையாகும். அதிகரித்து வரும் கரிக்காற்றை உறிஞ்சிக் குடித்து பூமிக்கு உயிர்க்காற்றை கொடுப்பது காடுகள்தான். மரங்கள் மகத்தானவை என்பதை நாம் அறிவோம். மரங்களை முயன்றால் நம்மால் வளர்த்து விட முடியும். ஆனால் காடுகளை உருவாக்க பல நூறு ஆண்டுகள் ஆகும். காடு என்பது கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியாவிலிருந்து யானை வரை, பாசியிலிருந்து ஆலமரம் வரை, பூச்சி, புழு, பறவை, விலங்கு, மரம், செடி, கொடி என பல்லுயிர் பரப்பு. அதனைக் காப்பாற்றினால்தான் இந்த உயிர்க்கோளத்தைக் காக்க முடியும். ஒரு நாட்டின் நிலப்பரப்பின் 33 விழுக்காடாவது காடுகள் இருக்க வேண்டும். எனவே சாலைகள், தொழிற்சாலைகள், கட்டிடங்கள், விவசாயம் என மனிதகுல வளர்ச்சிப் பணிகளை காடுகளற்ற சமவெளிப் பகுதிகளில் விரிவுபடுத்துவோம். மிச்சமுள்ள காடுகளுக்கு சிறு அழிவும் ஏற்படாமல் காத்து நிற்போம். இதுவே இனி வரும் தலைமுறைக்கு நாம் சேர்த்து வைக்கும் மிகப்பெரிய சொத்து என்பதை நினைவில் கொண்டு காடுகளைக் காப்போம் என உலக வனநாளில் உறுதியேற்போம். ■

**மரங்கள் மகத்தானவை என்பதை நாம் அறிவோம். மரங்களை முயன்றால் நம்மால் வளர்த்து விட முடியும்.**

## உலக தண்ணீர் தினம் [மார்ச் 22]

ஐக்கிய நாடுகள் அவையின் வேண்டுகோளுக்கிணங்க 1993ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மார்ச் 22ஆம் நாள் உலகெங்கும் உலக நீர் நாள் (World Water Day) அனுசரிக்கப்படுகிறது. உலகில் மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே இருக்க, அவர்களுக்குத் தேவையான குடிநீர் தேவையும் அதிகரிக்கிறது. குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய கிடைக்கும் நீரைக் குடிக்கும் நிலைக்கு உலகின் பல பகுதிகளில் உள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில்தான், ஐ.நா. சபை கடந்த 1992ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த கூட்டத்தை கூட்டியது. கூட்டத்தில் நீர்வளப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதை மக்களிடம் உணர்த்த 'உலக தண்ணீர் தினம்' அனுசரிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி ஆண்டுதோறும் உலக தண்ணீர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டியதும், நீர் ஆதாரங்களைக் காக்க வேண்டியதும், நீர் மாசுப்படாமல் இருக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் மனித சமுதாயத்தின் கடமையாகிறது.

எனவே, உலக தண்ணீர் தினத்தில் தண்ணீரை மாசுபடுத்தாமல், உயிர்போல் காப்போம் என்ற உறுதிமொழியை மனதில் ஏந்தி, அதனை நிறைவேற்றப் பாடுபடுவோம். ■

# சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

## மாநில அளவிலான வங்கியாளர்களின் ஒருங்கிணைந்த கருத்தரங்கு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் அழைப்பிற்கிணங்க அனைத்து வங்கி உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட மாநில அளவிலான கருத்தரங்கு 03.02.2015 அன்று சென்னயில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் தலைமை உரையாற்றிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்ட முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள். திட்ட செயல்பாடுகள் பற்றியும், திட்ட பயனாளிகளுக்கு வங்கிகள் நல்க வேண்டிய ஒத்துழைப்பும் குறித்தும் விளக்கினார். கூடுதல் திட்ட இயக்குநர் திரு. ஏ. ஆர். கிளாஸ்டன் புஷ்பராஜ் அவர்கள், திட்டத்தின் முக்கிய கூறுகள் குறித்து விரிவான விளக்கம் அளித்தார். தலைமை அலுவலக முதுநிலை ஊரக நிதி மேலாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர் ஆகியோர் முறையே ஊரக நிதி உதவி, குறுந்தொழில் மேம்பாடு, இடர்பாடு நிதி குறித்து விவரித்தனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயலாக்கப்படும் மா அபிவிருத்தி திட்டம், மூலிகைப் பயிர் மற்றும் காய்கறி உற்பத்தி சிறப்பு திட்டங்கள் பற்றி CCD நிறுவன மேலாளர் திரு. சரவணன் அவர்கள் எடுத்துரைத்தார். தென்னிந்திய மீனவர்கள் கூட்டமைப்பின் ஆலோசகர் திரு. எஃப்ரம் அவர்கள் மீனவர்களுக்கு, வங்கிக் கடன் இணைப்பின் அவசியம் குறித்து வங்கியாளர்களிடம் விவரித்தார். இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள், குறுந்தொழில் செய்வோர், கூட்டு பொறுப்புக் குழு உறுப்பினர்கள், காப்பீடு துயர் குறைப்பு நிதி பயனாளிகள், தங்கள் வங்கி அனுபவங்களை வங்கியாளர்களுக்கு எடுத்துரைத்தனர்.

இறுதியில் அனைத்து வங்கியாளர்களும் தமிழக கடலோர மாவட்டங்களில் சிறப்பாக செயல்படும் திட்ட செயல்பாடுகளுக்கு உறுதுணையாக, சுய உதவிக் குழுக்கள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் மீனவர்களுக்குத் தேவையான வங்கிக் கடன் அளிக்க ஆவண செய்வோம் என உறுதி அளித்தனர். இறுதியாக நிதி மேலாளர் நன்றி கூற கருத்தரங்கு இனிது நிறைவுற்றது. ■

**இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள், குறுந்தொழில் செய்வோர், கூட்டு பொறுப்புக் குழு உறுப்பினர்கள், காப்பீடு துயர் குறைப்பு நிதி பயனாளிகள், தங்கள் வங்கி அனுபவங்களை வங்கியாளர்களுக்கு எடுத்துரைத்தனர்.**

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

# மீன் வளர்ப்பீர்! கூடுதலாக வருமானம் பெறுவீர்!!

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகக் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு கடனுதவி வழங்கி அவர்களை சுய தொழில் மேற்கொள்ள வைத்து, அவர்களின் வாழ்வில் பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் உன்னத பணியினை சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் மேற்கொண்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோவில் ஒன்றியம், காலமநல்லூர் ஊராட்சியில் வசிக்கும் திருமதி. ஆண்டாள் என்பவர் மேற்படி திட்டத்தின் மூலம் கடனுதவி பெற்று தற்போது சுய தொழில் மேற் கொண்டு வருகிறார்.

தனது வளர்ச்சிக்கு சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் செய்துள்ள உதவி குறித்து திருமதி. ஆண்டாள் கூறும்போது, 'என்னுடைய பெயர் ஆண்டாள், நான் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவள். காலமநல்லூர் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பைச் சார்ந்த சரஸ்வதி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய கணவர் பரமசிவம், விவசாய கூலி வேலை செய்து வருகிறார்.

எங்கள் பகுதியில் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கடனுதவி பெற்று நானும், திருமதி. சுமதி என்பவரும் சேர்ந்து 66 சென்ட் பரப்பளவிலான குளம் ஒன்றை குத்தகைக்கு எடுத்து, அதில் மீன் வளர்ப்பு தொழில் செய்து வருகிறோம்.

இந்தத் தொழில் செய்வதற்கு எங்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் குறுந்தொழில் மேம்பாட்டின் கீழ் வட்டியில்லா கடனாக ரூபாய் இரண்டு இலட்சம் வழங்கப்பட்டது.

எங்களது பங்குத் தொகையாக ரூபாய் 27,000/- செலுத்தப்பட்டு, மொத்தம் ரூபாய் 2.27 இலட்சம் மதிப்பீட்டில் அக்டோபர் 2013ல் இத்தொழிலை துவங்கி சிறப்பாக செய்து வருகிறோம்.

மீன் வளர்ப்புத் தொழில் துவங்கியதிலிருந்து இதுநாள் வரை சுமார் 650 கிலோ மீன்களை விற்பனை செய்துள்ளோம். தற்போது 800 கிலோ அளவில் மீன் குஞ்சுகள் குளத்தில் உள்ளன.

மீன் விற்பனை மூலம் எங்களுக்குக் கிடைத்த இலாபத்தில் ரூபாய் 42,000/- கடனை திரும்ப செலுத்தியுள்ளோம். எனக்கு கிடைத்த இலாபத் தொகையில் என் வீட்டை பழுது பார்த்து சரி செய்துள்ளேன்.

என்னுடன் இணைந்து மீன் வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வரம் இன்னொரு பயனாளியான திருமதி. சுமதி என்பவர், எனக்கு கிடைத்த இலாபத் தொகையில் தன் மகன் வினோத்தை நாகப்பட்டினத்தில் பி.இ., படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். அதேபோல் தனது மகள் வனிதாவை மயிலாடுதுறை அரசு கல்லூரியில் பி.எஸ்ஸி., படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மீன் வளர்ப்புத் தொழில் துவங்க எங்களுக்கு கடனுதவி அளித்து, எங்களை தொழில் முனைவோர்களாக்கிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தை வாழ்த்தி, அதற்கு எங்களின் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறோம்' என்று குறிப்பிட்டார். ■

**தொழில் துவங்கியதிலிருந்து இதுநாள் வரை சுமார் 650 கிலோ மீன்களை விற்பனை செய்துள்ளோம். தற்போது 800 கிலோ அளவில் மீன் குஞ்சுகள் குளத்தில் உள்ளன. மீன் விற்பனை மூலம் கிடைத்த இலாபத்தில் ரூ. 42,000/- கடனை திரும்ப செலுத்தியுள்ளோம்.**

# வங்கியாளர்கள் மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கான கருத்துப் பட்டறை மற்றும் களப் பயணம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தால் திருவள்ளூர் மாவட்டத்தில் 14 கடலோர ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும் திட்ட செயல்பாடுகளை பார்வையிட மாவட்ட முதன்மை வங்கி மேலாளர், இந்தியன் வங்கி, திருவள்ளூர், இந்தியன் வங்கி மெதூர், உதவி மேலாளர் (விவசாயம்), இந்தியன் வங்கி கும்மிடிப்பூண்டி, முதன்மை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர், பொன்னேரி, உதவி மேலாளர் (விவசாயம்), பல்லவன் வங்கி மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுடன் பட்டறிவு பயணம் மேற்கொள்ளப்பட்டது.

அவுரிவாக்கம் கீழ்க்குப்பத்தில் மரக்கரி தயாரிக்கும் இடத்திற்கு சென்று அதனை தயாரிக்கும் முறை, மூலப்பொருட்கள் கொள்முதல் செய்தல், பணியாட்கள் கூலி, வங்கிக் கடன் பெற்ற முறை மற்றும் இலாபம் ஆகியவைகளை வங்கியாளர்கள் கேட்டறிந்தனர். மேலும் அருகிலுள்ள பனை ஓலை விற்பனை கூட்டுப் பொறுப்பு குழுவினரிடம் அவர்களின் தயாரிப்புகளான கைவினைப் பொருட்களை பார்வையிட்டு மூலப்பொருட்கள், சாயமிடுதல், பிற வேலைப்பாடுகள் , விற்பனை மற்றும் இலாபம் குறித்த விவரங்களை கேட்டறிந்தனர்.

பின்னர் பழவேற்காடு பகுதி வள மையத்தில் குழுமி இருந்த கோட்டைக்குப்பம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர். புத்தக பரமரிப்பு கணக்குகளை கணினியில் பதிவு செய்தல் (Tally Entry) ஆகியவை குறித்து வங்கியாளர்களுக்கு விளக்கப்பட்டது. அதுபோல் மாவட்ட செயலாக்க அலுவலகத்தில் திட்ட விவரங்கள், செயல்படுத்தும் முறைகள் ஆகியவை குறித்தும் அனைவருக்கும் விளக்கப்படம் மூலம் தெரிவிக்கப்பட்டது. வங்கி மேலாளர்கள், தகுதி வாய்ந்த குழுக்களுக்கு கடன் வழங்க ஆவண செய்வதாக தெரிவித்தனர். ■

# தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர்களின் கலந்தாய்வு

டாக்டர்.பாம்ராஜபுத்தலைமையிலானதேசிய மகளிர் ஆணைய உறுப்பினர்கள் கொண்ட குழுவினர் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் உதவியுடன் குறுந்தொழில் புரிந்து வரும் மகளிரிடம் 19.12.2014 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் கலந்தாய்வு மேற்கொண்டனர். பனிச்சமேடு ஊராட்சியில் ஸ்ரீ விநாயகர் குழுவை சேர்ந்த மூன்று பயனாளிகள் மேற்கொள்வதையும், கடன் விவரம், திருப்பு செலுத்திய விபரம், வருமானம், வேலைவாய்ப்பு ஆகியவற்றையும் கேட்டறிந்தனர். அனுமந்தை ஊராட்சியில் அன்னை இந்திரா குழுவை சேர்ந்த 7 மகளிரால் நடத்தப்பட்டு வரும் அன்னை காளான் வளர்ப்பை பார்வையிட்டு, உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்களை கேட்டறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து கூனிமேடு ஊராட்சியில் செந்தமிழ் குழுவை சேர்ந்த 6 உறுப்பினர்கள் நடத்தி வரும் ஆயத்த ஆடை தயாரிக்கும் தையலகத்தை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு கிடைக்கும் வேலை வா ய்ப்பு வருமானம் பற்றி கேட்டறிந்தனர். கீழ்புத்துப்பட்டு ஊராட்சியில் கறிக்கோழி வளர்க்கும் ஸ்ரீ விநாயகா குழுவை சேர்ந்த 2 பயனாளிகளிடம் அவர்களின் வருமானம், அதை அவர்கள் செலவு செய்யும் விதம், மகளிரின் சுதந்திரமான தனிப்பட்டசெயல்பாடுகள் பற்றி கேட்டறிந்தனர். குழுவினருடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்ட மாவட்ட செயலாக்க அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பலர் உடன் சென்றனர். ■

**சமூக மேம்பாட்டில் மகளிரின் பங்கு எந்த அளவு உள்ளது. தொழில் வளர்ச்சி மூலம் பெண்கள் பொருளாதாரத்தில் மேம்பாடு பெற்று வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளதா என்ற விவரங்களைக் கேட்டறிந்தனர்.**

# சமையல் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிப்பு கலன்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட அலகில் செயல்படும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் சதுரங்கப்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்த 21 சுய உதவிக் குழு உறுப்பினர்களும், கானாத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்த 21 சுய உதவிக் குழு உறுப்பினர்களும், கூட்டு வள மைய பணியாளர் 5 பேர் ஆக மொத்தம் 32 உறுப்பினர்கள், 03.01.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், கீழ் மணக்குடி ஊராட்சியில் நிறுவப்பட்டுள்ள சமையல் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலன்களை பார்வையிட களப்பயணம் மேற்கொண்டனர்.

கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா நிறுவனத்தில், சமையல் கழிவுகளிலிருந்து எரி வாயு தயாரிக்கும் முறை பற்றி அனைவருக்கும் விளக்கப் பட்டது. கலன்களில் எரிவாயுவை பயன்படுத்தும் கழிவுகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

பழைய சாதம், பயறு வகை, கிழங்கு, மீன் கழிவு போன்றவற்றை அதிகம் பயன்படுத்தலாம் எனவும், முருங்கைக்காய், பளிப்பு வகைகள் ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது என்பதும் தெரிவிக்கப்பட்டது.

இக்கலன் அமைக்க குறைந்த அளவு இடம் போதுமானது. இக்கலன் அமைக்க 40" வெப்பநிலை தேவைப்படும், நிலத்திலும், மாடிகளின் மேலும் கலனை அமைக்க முடியும் எனவும் தெரிவித்தனர். ஒரு சமையல் எரிவாயு கலன் அமைக்க ரூ. 19,000/- தேவைப்படுகிறது. இதில் ரூ. 5700/- IFAD-PTSLP மானியமாக வழங்கப்படும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மானிய தொகை ரூ. 5000/-ம், பயனாளிகள் பங்குத் தொகை ரூ. 1900/- என்பதும், கூட்டமைப்புக் கடன் தொகை ரூ. 6400/- எனவும் தெரிந்து கொண்டனர். கடனுக்கான வட்டி விகிதம் 6% என்றும் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

இக்கலன்கள் அமைத்த பிறகு, பயனாளிகளின் வீடுகளில், ஈ, கொசு தொல்லைகள் இல்லை. கலனிலிருந்து வெளியேறும் நீர் உரமாகப் பயன்படுகிறது என்பதுடன், விபத்துக்களும் ஏற்படுவது இல்லை என்பதை தெரிந்து கொண்டனர்.

அதன் பிறகு விவேகானந்தா கேந்திராவில் உள்ள எரிவாயு கலன் மற்றும் செயல்முறையினைக் கண்ட பின்னர், கீழ் மணக்குடி ஊராட்சியில் அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களான திருமதி. அருள்மேரி அவர்கள் அமைத்துள்ள எரிவாயு கலனை பார்வையிட்டனர்.

அப்போது திருமதி. அருள்மேரி அவர்கள் கூறும்போது, 'எங்கள் பகுதியில் கலன் அமைக்க எதிர்ப்பு தெரிவித்தனர். இதன் மூலம் புற்றுநோய் வரும் என்றும் கூறினர். கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து. இக்கலனால் நான் பெற்ற பலனைக் கண்டு தற்போது 30 உறுப்பினர்கள் கலன் அமைக்க ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு விண்ணப்பம் அளித்துள்ளனர்' என்று குறிப்பிட்டார்

பின்னர் ராஜக்காமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இருக்கும் ஆடராவினை கிராமத்தைச் சேர்ந்த திருமதி. மல்லிகா என்ற உறுப்பினர் கூறும்போது, 'எங்கள் கிராமத்த ல் பல உறுப்பினர்கள் இக்கலனின் பயன் அறிந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிடம் விண்ணப்பித்துள்ளனர்' என்றார்.

களப் பயணமாக சென்ற உறுப்பினர்கள் அனைவரும் சமையல் கழிவிலிருந்து எரிவாயு தயாரிக்கும் கலனை தங்கள் வீடுகளிலும் அமைப்போம் என்று உறுதி ஏற்றுள்ளனர். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த PTSLP திட்டத்திற்கு தங்கள் நன்றியினை தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினர். ■

**இக்கலன்கள் அமைத்த பிறகு, பயனாளிகளின் வீடுகளில், ஈ, கொசு தொல்லைகள் இல்லை. கலனிலிருந்து வெளியேறும் நீர் உரமாகப் பயன்படுகிறது என்பதுடன், விபத்துக்களும் ஏற்படுவது இல்லை என்பதை தெரிந்து கொண்டனர்.**

# புதுவாழ்வு திட்ட செயல்பாடுகள் ஆய்வு

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் 05.02.2015 மற்றும் 06.02.2015 ஆகிய நாட்களில் ஆய்வு செய்தார். ஆய்வின் முதல் நாளன்று கொண்டசமுத்திரம் ஊராட்சியில் டெங்கு விழிப்புணர்வு கூட்டத்தை துவக்கி வைத்தார். பின்னர் குடியாத்தம் இராஜகோபால் பாலிடெக்னிக் கல்லூரியில் மகளிருக்கான தையல் பயிற்சியினை துவக்கி வைத்ததுடன், சிங்கல்பாடி மற்றும் சின்னச்சேரி பால்உற்பத்தியாளர் பூச்சரத்தை பார்வையிட்டு, திட்ட ஒருங்கிணைப்பு பணியாளர்களுடன் கலந்தாய்வில் ஈடுபட்டார்.

ஆய்வின் இரண்டாம் நாள், மாவட்ட மற்றும் வட்டார மகமை செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டதுடன், மகமையின் பதிவேடுகளையும் ஆய்வு செய்தார். பின்னர் பெண்களுக்கான தற்காப்புக் கலை பயிற்சியை துவக்கி வைத்தல், மாதனூர் ஒன்றியம், சின்னச்சேரி ஊராட்சியில் மக்கள் அமைப்புகளுடன் கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகளிலும் கூடுதல் திட்ட இயக்குநர் கலந்து கொண்டார். ■

காஞ்சிபுரம்

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் புதுவாழ்வு திட்டப் பணிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,அவர்கள் மற்றும் மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., ஆகியோர் ஆய்வு செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், புலிப்பாக்கம் கிராமத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்கள், சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுனர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு செயல்பாடுகள் மற்றும் சமூக கணக்கு பதிவு முறை ஆகியவற்றை பார்வையிட்டு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள், பயனாளிகள் மற்றும் இளைஞர் பிரதிநிதிகளுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும் மற்றும் மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., ஆகியோர் கலந்துரையாடினர்.

இந்த ஆய்வின் போது, தேசிய அளவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம், திருமுடிவாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவருக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது. மேலும் கருணாகரச்சேரி ஊராட்சியில் பெண்களுக்கான தற்காப்பு கலை பயிற்சி எவ்வாறு நடத்துவது என்பது குறித்த முன்னோட்ட பயிற்சி முகாம் பார்வையிடப்பட்டது.

இந்த ஆய்வின் தொடர்ச்சியாக யங்பிராண்ட் ஆயத்த ஆடை நிறுவனத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் நேரடி வேலைவாய்ப்பு பெற்ற இளைஞர்களிடம் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், மேலும் புதிதாக தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளும் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வில் புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா, மாநில திட்ட வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன், திரு. சக்கரபாணி, காஞ்சிபுரம் மாவட்ட புது வாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் மற்றும் திட்டப் பணியாளர்கள் உடனிருந்தனர். ■

**திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற்பயிற்சிகள் வழங்கி, அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுத் தரப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது.**

## மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சிகள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி, வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக 53 மாற்றுத் திறனாளிகளுக்கு 'செல்போன் பழுது நீக்குதல் பயிற்சி' எஸ்.ஆர்.ஏ. என்ற நிறுவனத்தின் மூலம் 45 நாட்கள் வழங்கப்பட்டுள்ளது.

04.02.2015 அன்று திருவண்ணாமலை மாவட்ட மகமை பயிற்சி அரங்கில் புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சி. செவத்தான் தலைமையில் நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழா நிகழ்ச்சியில், மாநில புது வாழ்வு திட்டத்தின் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில வல்லுநர் திரு. எ. பெஞ்சமின் விக்டர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, பயிற்சி முடித்தவர்களை வாழ்த்தி அவர்களுக்கு சான்று மற்றும் உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் எஸ்.ஆர்.ஏ. பயிற்றுநர்கள், உதவித் திட்ட மேலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.■

## மனநல மருத்துவ முகாம்

நாமக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் எருமப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் உள்ளதிருமணமண்டபத்தில்மனநலமருத்துவமுகாம் 22.01.2015 அன்று நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சியர் திரு. தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தேவக்குமார், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் திரு. பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர். சாந்திவனம் டிரஸ்டின் மன நல ஆலோசகர்களான டாக்டர்கள் நவீன்குமார், அரவிந்தன், சுகுமாரன், கனகராஜ் ஆகியோர் மனநல ஆலோசனைகளை வழங்கினர்.

மாவட்ட ஆட்சியர் தனது உரையில், 'ஏற்கனவே இம்மாவட்டத்தில் 2 மன நல மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளன என்றும், மனநலம் பாதித்தவர்களிடம் அன்பு காட்டி அரவணைத்து பாதுகாக்க வேண்டும்' என்றும் குறிப்பிட்டார். ■

**மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்குவதுடன் அவர்களின் நல வாழ்விற்குத் தேவையான பல்வேறு உதவிகளும் செய்யப்படுகிறது.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு திட்டம்

## 41வது சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாத் துறையின் கீழ் தொழில் பொருட்காட்சி சென்னை தீவுத் திடலில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 41வது சுற்றுலா தொழில் பொருட்காட்சி பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் தற்போது நடைபெற்று வருகிறது. அரசின் ஒவ்வொரு துறையும் தங்கள் துறைகளின் சாதனைகளையும், தமது துறையினால் வழங்கப்படும் சேவைகளையும் மக்களுக்குப் புரியும் வண்ணம் மாதிரி வடிவங்களாக, கண்ணைக் கவரும் வண்ணம் அமைத்துள்ளன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அரங்கில், துறையின் சாதனைகளை விளக்கும் வண்ணம் மாதிரிகள், படங்கள், ஒளி ஒலி காட்சி அமைப்புகள் மற்றும் பயனாளிகள், நலத்திட்ட உதவிகள் போன்றவற்றின் மாதிரி வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. இந்த அரங்கில் புதுவாழ்வு திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளை விளக்கும் வண்ணம் அழகிய வடிவமைப்புகளும் இடம் பெற்றுள்ளன. இந்த ஆண்டு நமது அரங்கில் புதுவாழ்வு திட்டம் பழங்கு இன மக்களுக்கு வழங்கும் சேவைகளை எடுத்துரைக்கும் விதமாக, கோயம்புத்தூரில் உள்ள சாடிவயல் என்னும் பழங்குடி இன மக்கள் வாழும் பகுதியை காட்சி அமைப்பாக்கி நேர்த்தியாக எளிய வகையில் வடிவமைத்துள்ளது. இதுமட்டுமின்றி நமது அரங்கை பார்வையிட வரும் பெண்கள் பயன் பெறும் விதமாக, அவர்களின் எடை மற்றும் உயரம் பரிசோதிக்கப்பட்டு, அவர்களின் எடை உயரத்திற்கு ஏற்றவாறு உள்ளதா என்பதையும், ஆரோக்கிய மான உணவு பழக்க வழக்கங்களை எடுத்துரைப்பது, பார்வையாளர்களின் மத்தியில் சிறந்த வரவேற்பை பெற்று, அனைவரும் பாராட்டும் வண்ணம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ■

# புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் மாவட்டந்தோறும் டெங்கு விழிப்புணர்வு

தமிழ்நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் விருதுநகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் பரவலாக காணப்பட்டது. நாள்தோறும் டெங்கு நோய் தொற்றுக்கு ஆளானோரின் எண்ணிக்கை அதிகரித்து வந்த நிலையில், புதுவாழ்வு திட்டம் டெங்கு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து, தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் 165 கிராம ஊராட்சிகளில் முதல் கட்டமாக 3085 உறுப்பினர்களைக் கொண்ட விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின்போது டெங்கு பற்றிய விழிப்புணர்வு கட்டாயமாக 1 மணி நேரம் வழங்கப்பட்டது. 26,984 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. கிராம அளவில் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச்செயல்பாடுகளுக்காக 165 சமுதாய மாற்றுத் திறனாளி ஊக்குநர்கள் மற்றும் 248 சுய உதவிக் குழு பயிற்றுனர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஊராட்சிகளில் டெங்கு ஒழிப்பு உறுதிமொழி, குறும்படங்கள் காண்பித்தல் மற்றும் தேவையற்ற இடங்களில் நீர் தேங்கி இருந்தால் அதை அகற்றுவது, சுற்றுப்புறங்களை தூய்மைப்படுத்துவது போன்ற செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தை தொடர்ந்து, புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து மாவட்டங்களிலும் டெங்கு ஒழிப்பு மற்றும் தடுப்பு செயல்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

டெங்கு இல்லா தமிழகத்தை உருவாக்குவதில் மருத்து துறையிடன் மக்களின் சக்தியையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளுக்கு நாம் அனைவரும் ஆதரவு அளிப்போம் வாருங்கள். ■

**டெங்கு ஒழிப்பு உறுதிமொழி மற்றும் தேவையற்ற இடங்களில் நீர் தேங்கி இருந்தால் அதை அகற்றுவது, சுற்றுப்புறங்களை தூய்மைப்படுத்துவது போன்ற செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.**

**தூய்மைப்படுத்தலின் ஒரு அம்சமாக அநேக இடங்களில் தொடர்ந்து மாசுபடுவதைத் தடுப்பதற்காகவும், சுத்தமான காற்றை சுவாசிப்பதற்கும் மரக்கன்றுகளும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.**

# தூய்மையான இந்தியா இயக்கத்தில் புதுவாழ்வு திட்டத்தின் பங்கு

கடந்த 2014 ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதி, பாரதப் பிரதமர் உயர்திரு. நரேந்திர மோடி அவர்கள், 'தூய்மையான இந்தியா இயக்கம்' என்ற இயக்கத்தினை துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் இந்தியாவில் உள்ள 4041 நகரங்களில் உள்ள சாலைகள், கட்டமைப்புகளை தூய்மைப்படுத்துவதற்காக இத்திட்டம் துவங்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல பகுதி களிலும் இதற்காக அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் என்று பல நிறுவனங்களும் தாங்கள் பணிபுரியும் இடங்கள், குடியிருப்புகள், சாலைகள் என்று பல இடங்களிலும் சுத்தப்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழகத்திலும் பல இடங்களில் அரசு நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் இப்பணியினை செவ்வனே செய்து வருகின்றன.

தமிழ்நாடு அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்குக் கீழ் செயல்படும் புதுவாழ்வு திட்டம் மக்களுடைய மேம்பாட்டிற்காக மக்களைக் கொண்டு செயல்படும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தூய்மையான இந்தியா இயக்கத்திற்கு வலு சேர்க்கும் வகையில் 10.01.2015ஆம் தேதி முதல் 19.01.2015ஆம் தேதி வரை தூய்மைப் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

இதன் மூலம் புதுவாழ்வு திட்டத்தின் மாநில அலுவலகம், தமிழகத்தின் 25 மாவட்ட புதுவாழ்வு திட்ட அலுவலகங்கள், கள அலுவலகங்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வளாகங்கள், சாலைகள், பொதுக் கட்டிடங்கள் என அனைத்துப் பகுதிகளிலும் தூய்மையான இந்தியா இயக்கத்திற்கான உறுதி மொழியினை எடுத்துக் கொண்டதுடன் மட்டுமல்லாமல், வெற்றிகரமாக தூய்மை பணியும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த தூய்மைப் பணியில் முதல் நிலை அலுவலரில் இருந்து கடைநிலை ஊழியர் வரை அனைவரும் பங்கேற்றனர். மேலும் மக்களமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களுடன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொண்டனர்.

இந்த தூய்மைப்படுத்தலின் ஒரு அம்சமாக அநேக இடங்களில் தொடர்ந்து மாசுபடுவதைத் தடுப்பதற்காகவும்,சுத்தமானகாற்றைசுவாசிப்பதற்கும் மரக்கன்றுகளும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதில் பங்கேற்ற மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் குறிப்பிடும் போது, 'இந்த சுத்தப்படுத்தும் பணிகளின் மூலம் எங்களுடைய பகுதியை சுத்தமாக வைத்துக் கொள்ள முடிகிறது. மேலும், எங்கள் பகுதியில் சுகாதாரக் கேடு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதற்கும் இது பெரும் உதவியாக உள்ளது' என்றனர். ■

# மகளிருக்கு
## தற்காப்புக்கலை பயிற்சி

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?' என்ற நிலை மாறி, ஆளுக்கொரு கணினியுடன் நடைபோடுகின்றனர். இன்றைய காலக்கட்டத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் சாதித்து வந்தாலும், பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் தொல்லைகளும், குடும்ப வன்முறைகளும், உடல் மற்றும் மன ரீதியான தாக்குதலும் நடந்த வண்ணம் உள்ளன. இதைத் தடுப்பதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2014–15ஆம் ஆண்டு தமிழக அரசின் வறுமை ஒழிப்பு திட்டங்களில் முன்னோடி திட்டமான புதுவாழ்வு திட்டத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் 4465 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெண் உறுப்பினர்களுக்கு 'தற்காப்புக்கலை பயிற்சி வழங்கப்பட வேண்டும்' என்ற புதிய அறிவிப்பினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டு, இதற்காக ரூபாய் 4.50 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள 26 மாவட்டங்களில் உள்ள 4465 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களைச் சேர்ந்த 41,740 நிர்வாகிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்த 30,096 நிர்வாகிகள் என மொத்தம் 71,836 மகளிருக்கு தற்காப்புக்கலை பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

28.01.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், கருணாகச்சேரி ஊராட்சியில் பெண்களுக்கான தற்காப்புக் கலை பயிற்சியினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்வின் போது மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊராட்சிகளில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பெண்களுக்கான தற்காப்புக் கலை பயிற்சிகள் துவக்கி வைக்கப்பட்டு, தற்போது பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஊராட்சி அளவில் நடப்படும் இப்பயிற்சியில், ஒரு குழுவிற்கு 30 நபர்களைக் கொண்டு 12 மணி நேர பயிற்சியாக மாவட்ட மகமைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிகளின் மூலம் மகளிர் எளிய முறை உடற்பயிற்சி, கராத்தே மற்றும் ஜூடோ நுணுக்கங்கள், பலவீனங்களை பலமாக மாற்றும் ஆற்றல், கவனத்தை ஒருமுகப்படுத்தும் திறன், துணிச்சல், அபாயகரமான சூழ்நிலையில் பயமின்றி துணிச்சலுடன் எதிராளியை கைகளால், கால்களால், ஆயுதங்களால் தாக்கும் ஆற்றலும் மற்றும் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் திறன்களை பெற்றிடுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ■

### பெரம்பலூர்

சுய உதவிக் குழு பெண்களுக்கு புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் தற்காப்புக் கலை பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன்படி பெரம்பலூர் மாவட்டம், எறையூர் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினைச் சேர்ந்த 30 பெண்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் டாக்டர் தரேஸ் அஹமது, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். முன்னதாக நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. ப. சுதாதேவி அவர்கள் வரவேற்றார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவித் திட்ட மேலாளர் திரு. குமார், அணித்தலைவர் திரு. இராஜா மற்றும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தினர் செய்திருந்தனர்.

## அரியலூர்

அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் சமுதாயக் கூடத்தில் 28.01.2015 அன்று புதுவாழ்வு திட்டம் மூலம் பெண்களுக்கு வழங்கப்படும் தற்காப்புக் கலை பயிற்சியினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. தீ. சடையப்ப விநாயகமூர்த்தி அவர்கள் குத்துவிளக்கேற்றி இனிதே துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பெ. சுந்தரேஷ்வரன், வேளாண்மை ஆலோசகர் திரு. எம். சுப்ரமணியன் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ஜெரென்சி ஏ.எக்ஸ் பொன்னுசாமி அவர்கள் தற்காப்புக் கலை பயிற்சிகளை வழங்கினார்.

## புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் அன்னவாசல், கந்தர்வக்கோட்டை, கறம்பக்குடி மற்றும் குன்றாண்டார் கோவில் ஆகிய 4 ஒன்றியங்களில் உள்ள 155 ஊராட்சிகளில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களைச் சேர்ந்த 300 உறுப்பினர்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி 28.01.2015 முதல் கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள கரு. தெற்கு தெரு மற்றும் கரு. வடக்கு தெரு ஊராட்சிகளில் வழங்கப்படுகிறது. இந்த தற்காப்பு கலை பயிற்சிகளை மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. செ. வசுமதி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு. பாலசுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சேலம்

தமிழ்நாட்டில் புதுவாழ்வு திட்டம் சார்பில் அனைத்து கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட மகமையில் 28.01.2015 அன்று தற்காப்புக்கலை பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் திரு. க. மகரபூஷணம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. க. மூர்த்தி, உதவித் திட்ட மேலாளர்கள், அயோத்தியாபட்டிணம் வட்டார வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## கோயம்புத்தூர்

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு களின் உறுப்பினர்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது. இதன்படி கோவை மாவட்டம் இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சி சமுதாயக் கூடத்தில் பெண்களுக்கான தற்காப்புக் கலை பயிற்சியினை மாவட்ட ஆட்சியர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். தொண்டாமுத்தூர் ஊராட்சி பெருந்தலைவர் திருமதி மதுமதி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. அ. பிலிப்ஸ் இளையராஜா, ஊராட்சி மன்ற தலைவர் திரு. சதானந்தம், உதவித் திட்ட மேலாளர்கள், அணித்தலைவர்கள் மற்றும் பிறதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் 40 பெண்கள் கலந்து கொண்டனர். ■

இயற்கை வள மேலாண்மை என்பது மக்களும், இயற்கை நிலப்பரப்புகளும் தங்களுக்குள் தொடர்பு கொள்ளும் வகையை நிர்வகிப்பதை பற்றியதாகும். அது நிலப் பயன்பாட்டுத் திட்டம், நீர் மேலாண்மை, பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு, விவசாயம், சுரங்கம், சுற்றுலா, மீன் பிடித்தல் மற்றும் வனவியல் போன்ற தொழில் துறைகளின் எதிர்கால நீடித்திருக்குந்தன்மையை ஒன்றாகக் கொண்டு வருகிறது. அது மக்களும், அவர்களின் வாழ்வாதாரமும், நமது நிலப்பரப்பின் ஆரோக்கியம் மற்றும் ஆக்கப்பூர்வத்தன்மையை நம்பியிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள உதவுகிறது. மற்றும் அவர்களின் செயல்பாடுகள் நிலப்பரப்பின் கண்காணிப்பாளர்களாக இருக்க இந்த ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித் திறன் முக்கியமான பங்காற்றுகிறது.

கழிவிலிருந்து கெட்டுப்போன உயிர் பொருளின் திரள் உரமாகும். கரும்புச் சக்கை, வைக்கோல், களைகள் மற்றும் பிற கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் உரமானது, பண்ணை உரத்தில் சராசரி ஊட்டப் பொருட்களான 0.5 சதவீதம் நைட்ரஜன், 0.15 சதவீதம் பாஸ்பரஸ் மற்றும் 0.5 சதவீதம் பொட்டாசியம் ஆகியவை உள்ளன. உரக்குழியை நிரப்புவதற்கான ஆரம்ப நிலையில் டன்னுக்கு 10 முதல் 15 கிலோ மூலப் பொருட்களில் சூப்பர் பாஸ்பேட் அல்லது ராக் பாஸ்பேட் பயன்படுத்துவதன் மூலம் பண்ணை உரத்தின் ஊட்டச்சத்து மதிப்பை அதிகரிக்கலாம்.

பண்ணை உரமானது 4.5 மீ. முதல் 5.0 மீ நீளம், 1.5 மீ முதல் 2.0 மீ அகலம் மற்றும் 1.0 மீ முதல் 2.0 மீ. ஆழமுள்ள பொருத்தமான அளவு அகழிகளில் போட்டு வைக்கப்படுவதன் மூலம் உண்டாக்கப்படுகிறது. பண்ணைக் கழிவு அகழிகளில் அடுக்கடுக்காகப் போடப்படும், ஒவ்வொரு அடுக்கும் பசுஞ் சாணக் கரைசல் அல்லது நீர் தெளிக்கப்பட்டு ஈரமாக்கப்படும். ஐந்து அல்லது ஆறு மாதங்களில் உரமானது பயன்பாட்டுக்குத் தயாராகும்.

உரமாக்கல் என்பது அடிப்படையில் ஊரக அல்லது நகர்ப்புறப் பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்ட உயிர்ம எச்சங்களின் நுண்ணுயிரி சிதைவாகும்.

## உரமாக்கும் முறைகள்

### இந்தோர் முறை

உயிர்மக்கழிவுகள் கால்நடைக் கொட்டிலில் படுக்கைப் போல பரப்பு வைக்கப்பட வேண்டும். சாணத்துடன் கோமியமும் கலந்த பொருள் அன்றாடம் அகற்றப்பட வேண்டும். மற்றும் அதைப் பொருத்தமான இடத்தில் 15 செமீ அடர்த்தியான ஒரு அடுக்காக அமைக்கப்பட வேண்டும். கோமியம் கலந்த மண் கால்நடைக் கொட்டிலில் இருந்து சுரண்டப்பட்டு நீருடன் கலந்து அந்த அடுக்கின் மீது இரண்டு அல்லது மூன்று நாளைக்கு ஒருமுறை தெளிக்கப்பட வேண்டும்.

நன்கு சிதைந்த உரத்தின் ஒரு அடுக்கு மேலே தெளிக்கப்பட்டு அந்தக் குவியல் திருப்பிப் போடப்பட வேண்டும். பழைய உரமானது காரணிப் பொருளாக பொருள்களை சிதைப்பதில் செயல்படும்.

இந்தக் குவியல் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொந்தரவு செய்யப்படாமல் அப்படியே விடப்பட வேண்டும். பிறகு அது நன்றாக ஈரமாக்கப்பட்டு திருப்பிப் போடப்பட வேண்டும். உரமானது அடுத்த மாதம் பயன்பாட்டிற்கு தயாராக இருக்கும். ■

(தொடரும்)

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,100 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

# கழிப்பறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியமே

**மனித மலம் ஆபத்தானது**

1 கிராம் மனித மலத்தில்

10,000,000 வைரஸ்கள்

1000,000 பாக்டீரியா

1,000 பாராசைட்சிஸ்ட்கள்

100 பாராசைட் முட்டைகள் உள்ளன.

வெளியே மலம் கழிக்கும் பொருட்டு, ஏரி அல்லது குளக்கரைக்கு செல்பவர்களுக்கு தங்கள் அடிப்பாதங்கள் வழியாக கொக்கிப் புழுக்கள் மற்றும் உருண்டைப் புழுக்கள் உடலினுள் புகுந்து பல்வேறு வயிற்றுப்பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

வெளியே மலம் கழித்த பின், சுத்தம் செய்து கொள்ள, நீர் ஓட்டமில்லாத ஓடையையோ, குளத்தையோ பயன்படுத்துவதால் பல்வேறு தொற்றுகள் உண்டாகி அதனால் வயிற்றுப்போக்கு, வாந்தி ஆகியவை அடிக்கடி ஏற்படுகின்றன, தேவையான சிகிச்சைகள் அளிக்கப்படாமல் போகும்பட்சத்தில் உயிர் இழக்கும் அபாயம் உள்ளது. மலம் கழிக்கும் மைதானம், வயல் அல்லது குளக்கரையிலிருந்து உண்டாகும் கொசுக்கள் மூலமாக அருகிலிருக்கும் குடும்பங்கள் மிகவும் பாதிப்படைகின்றன, மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களும் உண்டாகின்றன.

குழந்தைகள் வீட்டிலும், பள்ளியிலும் கழிவறையை மட்டுமே பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். தங்கள் வீட்டுக்கென எளிமையான சுத்தமான சுகாதாரமான கழிவறைகளை உருவாக்கி பயன்படுத்துவதன் மூலம் நோயற்ற, ஆரோக்கியமான வாழ்வினை பெற வேண்டும் அனைவரும்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication 19.02.2015

# இந்தியன் வங்கியும், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனமும் இணைந்து செயல்படுத்தும் கிராமப்புற காப்பீட்டுத்திட்டங்கள்

கிராமப்புற பெண்களுக்கான காப்பீட்டுத் திட்டம்

கிராமின் தனிநபர் விபத்து காப்பீட்டுத்திட்டம்

சுவாஸ்த பீமா மருத்துவ காப்பீட்டுத்திட்டம்

ஜனதா தனிநபர் விபத்து காப்பீட்டுத்திட்டம்

விவசாயிகளுக்கான கிசான் கிரெடிட் கார்டு தனிநபர் காப்பீட்டுத்திட்டம்

குடிசை காப்பீட்டுத்திட்டம்

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி